
# சைவநீதி




விலை
ரூ. 20/-

ஈசுர (ஆவணி)

## உள்ளே ..................................................


| | | | |
|---|---|---|---|
| 1. | மாதா பிதா குரு தெய்வம் | | 1 |
| 2. | சிரங்குவிவார் | இலக்கண வித்தகர் இ. நமசிவாய தேசிகர் | 2 |
| 3. | சேக்கிழார் காட்டும் சைவநீதி | பண்டிதர் மு. கந்தையா | 3 |
| 4. | சைவசமய வாழ்விற்குரிய மூன்று வழிபாடுகள் | ஞானப்பிரகாசசிவம் மெய்கண்டார் ஆதீனம் | 5 |
| 5. | புகழ்த்துணை நாயனார் | சிவ. சண்முகவடிவேல் | 8 |
| 6. | கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வர தேவஸ்தானம் | பிரம்ம ஸ்ரீ சோ. குஹானந்தசர்மா | 9 |
| 7. | அன்று இலைமறைகாய் இன்று அங்கை நெல்லிக்கனி | பண்டிதர் ச. சுப்பிரமணியம் | 12 |
| 8. | மறை ஞான சம்பந்தர் | அருள்மொழி அரசி வசந்தா வைத்திய நாதன் | 14 |
| 9. | பயில்வோர் பயிற்சிக்கு | மாதினி | 15 |
| 10. | மாத மகத்துவம் | செ. நவநீதகுமார் | |
| | விநாயக சதுர்த்தி விரதம் | | 16 |
| | சங்கட ஹர சதுர்த்தி | | 18 |
| | ஆவணி ஞாயிறு | | 19 |
| | ரிஷி பஞ்சமி | | 20 |
| | அநந்த விரதம் | | 20 |
| 11. | திருவாசகம் திருவுள்ளக்கிடை | பண்டிதர். சி. அப்புத்துரை | 21 |
| 12. | நினைவிற் கொள்வதற்கு | | 25 |

உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவநீதி

மலர் :1 ஈசுர ஆவணி சைவ சமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் இதழ்: 5

## மாதா பிதா குரு தெய்வம்

ஐயறிவுடையன மாக்கள்; ஆறறிவுடையவர் மக்கள். ஆறாவது அறிவுதான் பகுத்து அறியும் அறிவு. "பகுத்தறிவு" என்று ஒன்று இருந்ததனாலேதான் நாம் மக்களாகும் பேறுபெற்றோம். எங்களுள்ளும் பலர் பகுத்தறிவைப் பயன்படுத்தாது மக்களிலிருந்து விலகுகிறார்கள். விலகினால் விலங்கு என்பதை அறிவோமாக. இங்கு மாக்கள் விலங்குள்; மக்கள் மனிதர்கள்.

மக்களாகியநாம்; "வைகறையில்" துயில் எழுதல் வேண்டும். துயில் எழும்போதே நம்மை மக்களாகப் பெற்ற தந்தை தாயரைத் தொழுதுகொண்டு எழுதல் வேண்டுமென்பது முந்தையோர் கண்டமுறை. தந்தை தாயர் முன்னறிதெய்வங்கள். நாம் செய்யுங்கருமங்கள் சித்திக்கவும், நாம் பெறவுள்ள பேறுகள் வாய்ப்பாக இருக்கவும் அதுதான் வழியென்று ஆசாரக்கோவை கூறுகிறது. நமக்கு இருமுது குரவர்களாக உள்ளவர்களே மாதாபிதா என்போர். மாதா, தாய். பிதா. தந்தை. இவர்களின்றேல் நாமில்லை, அவர்களின் பெருங்கருணையை நினைந்து நினைந்து மனமுருகிக் கரங்கூப்பி என்றும் வழிபடவேண்டியவர்கள் நாம்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்", "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை" "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" என்பவை எமக்குத்தாரக மந்திரமாக அமைந்தவை. "ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே" என்பது தாய் கூறும் மகாவாக்கியம். பெற்றுத்தருவது சாதாரண விடயமா? பத்துத்திங்கள் வயிற்றினுள் வைத்துப் பரிந்து காத்தவர் அன்னையன்றோ! அவள் பிழைத்த பிழைப்புகள் எத்தனை எத்தனை. அத்தனையும் திருவாசகம் கூறும். இதற்கு நாம் செய்யும் கைமாறு தான் என்ன? அத்தனையும் அவளின் தியாகத்திற்குப்போதுமா? சிந்திக்க வேண்டும். சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடன். தாய் பிள்ளையைப் பெறுகிறாள். பின்வளர்க்கிறாள். தந்தை அப்பிள்ளைக்குக் கல்வியைப் பெற்றுக் கொடுக்கிறான். "சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனெச்" சங்க இலக்கியம் கூறுகிறது.

எமக்கு ஞானந் தருபவர் குரு. இறைவனே குருவடிவாக வந்து ஆட்கொள்வதுமுண்டு.

குரு ஞானத்தை அருளுகின்றார். அதனால் ஞானகுரவராகிறார். இருமுதுகுரவர்களாகிய தாய் தந்தையர் எங்களைப் பெற்று வளர்த்து உருவாக்கி ஞானகுரவரிடம் கையளிக்க, அவர் ஞானோபதேசம் செய்து இறையுணர்வை நல்குகிறார். இந்நிலையிலே தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகிது. அந்நிலையே தெய்வாம்சம் சித்திக்கிறது.

தெய்வத்தைத் தொழுவோம். மாதா பிதா குருவை முன்வைத்து இப்பயிற்சி வழங்கப்பட்டிருப்பது போற்றுதற் குரியதே.!

கௌரவ ஆசிரியர்
சைவப்புலவர்மணி வித்துவான்
திரு.வ. செல்லையா

நிர்வாக ஆசிரியர்
சிவஸ்ரீ பால ரவிசங்கரக்குருக்கள்
திரு. செ. நவநீதகுமார்

42, டிவாஸ் ஒழுங்கை
கிராண்ட்பாஸ்,
கொழும்பு 14.
தொலைபேசி : 423895

பதிப்பாசிரியர்
திரு.ச.சக்தி விக்னேஷ்வரன்

# சிரங்குவிவார்

இலக்கணவித்தகர் இ. நமசிவாய தேசிகர்

"கரங்குவிவார் உண்மகிழும் கோன்கழல்கள் வெல்க: சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க", என்ற திருவாசக அடிகளுக்குக், கையினை நெஞ்சின்நேரே கூப்புவார் மனம் மகிழுதற்குக்காரணமான இறைவனின் பாதங்கள் வெல்வன ஆகுக. அக்கைகளைத் தலையிலே வைத்து வணங்குவாரை உயர்விக்கும் சீரினை உடைய இறைவனுடைய பாதங்கள் வெல்வனவாகுக என்று சாதாரணமாகப் பொருள் கொள்ளப்படுகிறது. அங்ஙனம்பொருள் கொள்வதுபொருத்தமானது போலத் தெரியவில்லை.

கரங்குவிவார் என்பதில் குவிதல்வினை கரத்துக்குரியது. சிரங்குவிவார் என்பதில் குவிதல்வினை சிரத்திற்குரியது. கரத்திற்குரியதன்று. இங்கு, இன்ன இடத்துக்குநேரே என்றாவது இன்ன இடத்தில் வைத்து என்றாவது இடஞ் சுட்டிக்கூறப்படவில்லை. ஆதலால், சிரத்திலே வைத்துக் கைகுவித்தலையும், இவ்வொருதொடரில் வைத்துக்கொள்ளலாம். எனவே, சிரங்குவிவார் என்பதற்குவேறு பொருள் கொள்ளுதல் வெண்டும்.

"கவிசெந்தாழிக் குவிபுறத் திருந்த செவிசெஞ் சேவல்" என்ற செய்யுட்பகுதியில் குவிபுறம் என்றது தாழியினது வளைந்த புறத்தை ஆதலின் குவிதல் என்பது வளைதல் என்றபொருளைத்தருதல் பெறப்படும். எனவே சிரங்குவிவார் என்பதற்குத் தலைவளைவோர். அதாவது தலைவணங்குவோர் என்று பொருள்கொள்ளலாம்.

தலைபணிந்தோரைத் தலைநிமிரச் செய்வான் இறைவன். "இறுமாந்திருப்பன் கொலோ ஈசன்பல்கணத்தெண்ணப்பட்டிச் சிறுமான் ஏந்திதன் சேவடிக்கீழ்ச் சென்றங்கிறுமாந்திருப்பன்கொலோ" என்றருளினர் அபரடிகளும். "ஒருநீயாகித் தோன்ற" என்றது திருமுருகாற்றுப்படை.

# சேக்கிழார் காட்டும் சைவநீதி

பண்டிதர் மு. கந்தையா

சைவநீதி சாஸ்வதமானது. சகல ஜீவன்களினதும் சுபீட்சத்துக்கும் ஏதுவானது. அதுவும் மறைமுகம். அதனை நிர்வகித்திருக்கும் இறைவனும் மறைமுகம். அதனால் மக்கள் சைவநீதியையும் கண்காண அறியார். இறைவனையுங் கண்காண அறியார். ஆனால் எல்லா வற்றுக்கும் வகைசெய்யத்தவறாத உத்தரவாதமுள்ள இறைவன் இதற்கும் ஒருவகை செய்துள்ளான். மனிதருள் உயர்தரமான ஒருவனிடத்திற் சைவநீதி விளக்கத்தை ஏற்படுத்தி அதைப் பரிபாலிக்கும் ஆணையையும் அவன்பால் வைத்திருக்கிறான் இறைவன். அவனே மன்னன் எனப்படுவான். ஆதலின் தான் இறைவன் பணித்த நீதியை அவன் வழிநின்று பரிபாலிக்குங் கடப்பாடுடையவன் என்ற பொறுப்புணர்ச்சியோடு இறைவ னாணைக்கஞ்சிநின்று சைவநீதியைப் பரிபாலிக்க வேண்டியது மன்னனொருவனுக்குத் தர்மக்கடமையாகும். சைவநீதிக்கு விளக்கம்தர நூல் செய்யுஞ்சேக்கிழார் அதற்குதாரணமாக மனுவேந்தன் வரலாற்றை நூன்முகப்பில் வைத்துள்ளமை பற்றி முன் கவனித்தோம். அவ்வகையில் மற்றோர் மன்னன் சைவநீதி விளங்க நின்ற வாற்றை இனிக் காண்போம்.

அரசனொருவனது பட்டத்துயானை ஒன்று கருவூர் ராஜவீதியில் வெட்டுண்டு இறந்து கிடக்கிறது. அதன் பாகர்களும் சுற்றிவரப்பிணமாய்க் கிடக்கிறார்கள். சிவனடியாரொருவர் கோடாலியுங்கையுமாக அவ்வயலிற் காணப்படுகிறார். யானையும் பாகரும் வெட்டுண்ட செய்தி கேட்டு ஸ்தலத்துக்கு விரைந்த அரசன் யாரிது செய்தார்? என்று கர்ச்சிக்கிறான். நானே செய்தேன் என்று நெஞ்சு நிமிர்த்தி எதிர் வந்த சிவனடியார், அரசனே கேள். இந்தப்பட்டத்து யானை இங்கிருக்கும் திருவானிலை என்ற சிவாலயத்துக்குப்பூக் கொடுக்குந்தொண்டுசெய்யும் சிவகாமி யாண்டார் என்ற அன்பர் வழக்கம்போல் இன்றுங் கொண்டு வந்த பூக்கூடையை எட்டிப்பறித்து நிலத்தில் சிந்திற்று. சுவாமி முடியில் ஏறவேண்டிய பூ கேவலமாக நிலத்திற் சிந்தித் தெறித்துக் கிடப்பதையும் துயர்தாங்காத அவ்வன்பர் தரையடித்துப் புலம்பி அலுத்துச் சோர்ந்துகிடப்பதையும் அதோபார். இந்த அதிக்கிரமமான சிவாபராதஞ் செய்த யானையையும் அதை அடக்கி அதிக்கிரமம் விளையாமற் காக்கத் தவறிய பாகர்களையும் நானே வெட்டி வீழ்த்தினேன் என்கிறார். கேட்டமாத்திரத்தே தனது யானையும் பாகரும் இழைத்த தவற்றைத் தானே இழைத்தவறாக உணர்ந்தேற்றுக் கொண்ட அரசன் மிகுந்த விநயத்துடன் சிவனடியாரைப் பணிந்து நின்று, சுவாமி நீர் யானையை எதிர்த்தபோது அதனால் உமக்குத் தீங்கெதுவும் நேராமற் போனது அடியேனது நல்லதிர்ஷ்டம். அஃதிருக்க, இந்த மஹாசிவாபராதத்துக்குத் தீர்வாக யானையையும் பாகரையும் மட்டும் நீர் கொன்றது அரை குறைத் தீர்வாகுமேயன்றி முழுமைத் தீர்வாகாது. நேர்ந்தவற்றுக்கு உத்தரவாதப் பொறுப்புள்ளேனாகிய நானும் உமது கையாற் கொல்லப்பட்டாகவேண்டும். இதோ என்உடைவாளால் நீரே என்தலையைத் துணித்துவிடுக' என்றது மட்டின்றி, இவர்கையால் என்தவற்றுக்கு உரியதீர்வு பெற்று நான் உய்ந்தவனாவேன்' என்ற உள்ளமலர்ச்சி முகம் வாயிலாகப் பிரதிபலிக்க அந்த அரசன் அவனிடம் தன் உடைவாளை நீட்டியபடி தலைதாழ்த்திப் பவ்வியமாக நின்று கொண்டிருக்கின்றான்.

பரவலான பொது அறிவியல் நோக்கில் இந்நிகழ்ச்சியின் போக்கு விநோதமாகப்படு மென்பதில் வியத்தற்கெதுவுமேயில்லை. ஏனெனில், வாழ்வுக்காக நீதியா நீதிக்காக வாழ்வா என்ற இரண்டில் முன்னையதே இன்றைய நோக்கு. நடந்து விட்டநிகழ்ச்சியினால் தவிர்க்க முடியாத வகையில் ஏற்படவுள்ள பாதிப்பிலிருந்து கூடியபட்சம் சம்பந்தப்பட்டோரைப் பாதுகாப்பதே இன்றைய நீதி நோக்கு. குறித்த விடயம் இதற்கு எதிர்க் கோணத்திலுள்ளது. நீதிக்காகவே வாழ்வு என்பது அது. மனிதன் வாழ்வு இரண்டாம்பட்சம்; நீதியின் வாழ்வே முதலாம்பட்சம். மனிதன் வாழ்வு சாவு இரண்டற்கு முரியன். இரண்டும் தானியங்கிகளல்ல. ஒன்றிரண்டல்ல கோடானு கோடி உயிர்களின் வாழ்வையும் சாவையும் நிர்ணயிக்கும் தெய்வ ஆணையால் இயங்குவன அவை. அத்தெய்விக ஆணைக்கு வாழ்வொன் றேயன்றிச் சாவு உரியதாகாது. எந்நிலையிலும் வாழ்வே அதற்கு அநுமதிக்கப் படற்பாலது. அநுமதித்தல் என்பது அதன் போக்கையறிந்து உள்ளவாறு அது இருக்கவிட்டு விடுலேயன்றி அது பிறர்முயற்சியில் தங்கியிருப்ப தென்றாகாது. எனினும் உலக நடைமுறைகளில் மனிதருக்குள்ள மயக்கங் காரணமாக அத்தெய்வ ஆணைக்கு மாறு பாடானயத்தனங்கள் முனைப்புக் கொள்ளுதலும் உள்ளதொன்றே. அந்நிலையிற் பிறர்நழுவநேரின் தான்தலையிட்டுத் திருத்தி நேர்படுத்துதலும் அதேவேளை தன்னைப் பொறுத்தமட்டில் தான் அந்நழுவலுக்கு ஆளாகாமல் முன்னெச்சரிக்கையுடன் முன்மாதிரியாக இருந்து கொள்வதும் அரசன் பொறுப்பாகும். உலக நிர்வாகத்துக்கு அரசு என ஒன்று வேண்டப்பட்டதன் அவசியமும் ஒருதலையாக இதுவே. இனி மேற்குறித்த சம்பவத்துக்கு வருவோம்.

அரசன் பார்த்தான். சிவதொண்டுஞ் சிவனடியாரும்

வாழ்வதிலேயே உலக சேமம் தங்கியுள்ளது. அந்நோக்கில் அவை இடையூறின்றி வாழவிடப்படுதல் சிவனாணை. தனது இராச்சியத்தில் அதற்கு எதும் அனர்த்தம் நேரவரின் தன் ஆணைக்குட்பட்டஎவரால் அது நிகழ்ந்திருப்பினும் அதுதன்னால் நிகழ்ந்ததாகவே ஒப்புக்கொள்ளவேண்டிய பொறுப்பை அரசன் தட்டிக் கழித்தலாகாது. அத்துடன் ஆர் செய்தாலும் அபராதம் அபராதமே. இங்கு நிகழ்ந்தது தன் அபராதமாக ஏற்கப் பட்டபின் அதற்கான தண்டனையைத் தானாக முன்வந்தேற்பதை விட அசரனொருவனுக்கு யோக்கியமானது வேறுஇருக்க இயலாது எனத்துணிந்து கொண்டான். மனு வேந்தன் செய்தியில் அந்நியன் ஓர் உயிர் கொன்றால் அப்பழிக்குத் தீர்வாக அவனைக் கொல்பவனான நான் என்மகன் பசுக்கன்றைக் கொன்றவிடத்து அதற்குத் தீர்வாக அவனையே கொல்லத் தவறுவதை எவ்விதத்திலும் நியாயப்படுத்தமுடியாது என அவ்வேந்தன் அழன்றதன் காரணமும் இதுவே. இத்தருணத்தில் அதனையும் நினைவுகொள்வோம்.

மேற்கண்டவாறு துணிந்து கொண்டமன்னன் தன்னைத்தான் பலியாக்குந் தோரணையிலே தன் உடைவாளைச்சிவனடியாரிடம் நீட்டிக்கொண்டு தலைதாழ்த்திநின்ற அந்நிலை சிவனடியாரின் ஆத்துமத்தைத் தீண்டிவிடுகிறது. அவர் பார்த்தார், என்ன இக்கட்டில் மாட்டிக்கொண்டோம் நாம்!. நேர்ந்த தவற்றுக்கு நடந்ததீர்வு போதாதென்று மேலதிகத்தீர்வு வேண்டிநிற்கின்றானே இந்தப் பரிசுத்தாத்மா. தன்உடைவாளைத் தன்கையால் நீட்டிக் கொண்டிருக்கும் இவன் நான் அதை ஏற்கமறுத்தால் தன்னையே தான் தீர்த்துக் கட்டி விட்டானாயின் என்செய்வது. இதை ஏற்பதால் நேரும்அபத்தத்தைவிட ஏற்காமையால் நேரக்கூடும் அபத்தம் பெரிதாகிறதே! என்ற விசாரத்தின் பேரில் நீட்டியவாளை ஏற்றுக்கொண்டார். ஆனால், அதன் சார்பில் அரசன் முகத்தலர்ந்த சோபையின் பிரகாசம் சிவனடியாரைத் திகைக்க வைத்துவிட்டது. தன்னை யான் கொன்றுவிடப்போகிறேன் என்ற இவனது உளப்பூரிப்பின் பிரதிபலிப்பே இப்பிரபாவம். அவன் நம்பிய அளவில் தான் கொல்லத் துணிந்த பாவத்துக்கு உள்ளாவேன். இந்நிலையில் என்னை நான் தீர்த்துக் கட்டுவதன்றி வேறு மார்க்கமேதுமில்லை எனத் துணிந்தார். துணிந்தமாத்திரத்தே உடை வாளைத் தன் கழுத்துக்கு மாட்டக்கொண்டுபோனார். நிலைமை எதிர்மாறாவதைக் கண்ட மன்னன் கணம் பிசகாமல் தன் புயவலி முழுவதையுங் கூட்டிச் சிவனடியார் கையையும் , வாளையும் ஆட அசையவிடமற் குறட்டுப் பிடியாகப் பிடித்துக் கொண்டான். எவ்வளவுக்கு அழுத்திப் பிடித்தும் சிவனடியார் வாளைச் சோரவிட்டிலர். நிலைமை படுசிக்கலாயிற்று.

சிவனடியார் சிவப்பணிக்கு இடையூறிளைத்த யானையையும் பாகரையும் கொன்றதன் மூலம் சிவதர்மம் பேணுஞ்சைவநீதியின் மேல்வரம்பில் நிற்கிறார். அரசன் நேர்ந்ததவற்றுக்குத் தன்னைப்பலியாக்குதல் மூலம் சிவதர்மம் பேணுஞ் சைவவநீதியிலேயே நிற்கிறான். எவர் உயரம் எவர் பதிவு என்ற பகுப்பாய்வுக்கு இடமில்லாத சர்வசமத்துவ நிலையில் இருவருடைய ஆத்மிக உத்வேகமும் ஒன்றையொன்று எதிர்த்து நிற்கின்றன.

எல்லார் இடத்தும் அவரவர் உள்ளுணர்வின் மயமாய் நின்று அவரவர் நிலையைத் தேர்ந்து அவரவர்க்கருளும் திருவருளே வெளிவந்து இப்படுமுடிச் சைஆவிழ்க்க வேண்டியாகிறது நிலைமை. மூன்றாந் தரப்பாக முன்வருகிறது திருவருள். இருவருங் கேட்க எழுந்தொலிக்கிறது அசரீரி, பெருந்தகையாளர் களே! சிவதர்மம் பேணும் தொண்டுறுதியில் நீவிருவரும் பெற்றிருக்கும் உயர்நிலையை உலகறியவைக்கும் உபாயமாக இச்சம்பவம் திருவருளால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரத்தியேக நிகழ்ச்சியாகும்– என்றது அசரீரி. தன்னில் தானாகவே அவிழ்ந்தது சிக்கல். அரசன் இருப்புக் கைப்பிடியை விட்டதோ சிவனடியார் வாட்பிடியை விட்டதோமுதல் என்பதற்கில்லை. எவரடியில் எவர் முன்விழுந்தார் என்பதற்குமில்லை. சிந்தின மலர் கூடையில் ஏறிநிறைகிறது. இறந்த யானையும் பாகரும் உறங்கி எழுவார்போல எழுகின்றனர். சர்வமங்கலமான செளசன்யநிலை உருவாகிறது.

சைவநீதி தன் யதார்த்த பாவத்திற களை கொள்ளுமிடம் இறைவன் மகிழ்ந்து வெளிநிற்கும் இடம் என்பதைச் சேக்கிழார் இதில்வைத்துக் காட்டுகிறார்.

இதில் வந்த அரசன் புகழ்ச்சோழன், சிவனடியார் எறிபத்தநாயனார்.

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை
வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

நாவலர் இரண்டாம் பாலபாடம்.

# சைவசமய வாழ்விற்குரிய மூன்று வழிபாடுகள்

**ஞானப்பிரகாசசிவம் மெய்கண்டார் ஆதீனம்**

குரு,லிங்கசங்கம வழிபாடு மூன்றும் சைவ சமய வழிபாட்டிலே மிக முக்கியமானவை. திருமுறை வழிவந்த பத்திநெறியிலும் சித்தாந்த சாத்திர வழிவந்த அறிவு நெறியிலும் இவை முக்கியமே. சிவஞானபோதம், சிவ ஞான சித்தியார் சிவப்பிரகாசம் மூன்றும் முறையே சைவசித்தாந்த முதல், வழி, சார்புநூல்களாகும். இவை ஒவ்வொன்றும் பன்னிரண்டு சூத்திரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு சூத்திரமும் பன்னிரண்டு திருமுறைகளின் கருத்தினைக் கொண்டிருப்பதாகக் கூறுவர். பன்னிரண்டாம் சூத்திரம் – பெரியபுராணம்.

சிவஞானபோதம்பன்னிரண்டு சூத்திரம் 40 அடிகள்; 216 சொற்கள்; 624 எழுத்துக்களை உடையது. உலகிலுள்ள மிகப்பெரிய கருத்துக்களை உள்ளடக்கிய மிகச்சிறிய நூல்இது.

பன்னிரண்டு சூத்திரங்களில் முதல் ஆறும் பொது இயல்புபற்றியவை. பின் ஆறும் சிறப்பியல்பு என்னும் உண்மை இயல்புபற்றியவை. பொது இயல்பில் முதல் மூன்று சூத்திரமும் பிரமாண இயல். பின் மூன்றும் இலக்கண இயல். சிறப்பியலில் முதல் மூன்றும் சாதானவியல். பின் மூன்றும் பயன் இயல்.

சைவசித்தாந்தப்பயன் சிவஞானப்பேறே – சிவானந்தமே, சிவஞானியாதலே! சிவஞானியானாலும் வழிபாட்டினைக்கைவிடலாகாது என்பதைப் பன்னிரண்டாம் சூத்திரம் பின்வருமாறு கூறுகின்றது.

"செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழிஇ அன்பரொடு மரீஇ
மால் அறநேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே"

மேற்காட்டிய சூத்திரத்தை விளக்கவந்த சிவஞானசித்தியார்த் திருப்பாடல் பின் வருவதாகும்.

"செங்கமலத் தாள்இணைகள் சேரல்ஒட்டித்
திரிமலங்கள் அறுத்துஈசன் நேசரொடும் செறிந்திட்டு.
அங்கவர்தம் திரிவேடம் ஆலயங்கள் எல்லாம்
அரன் எனவே தொழுது இறைஞ்சி ஆடிப் பாடி
எங்கும் யாம் ஒருவர்க்கும் எளியோம் அல்லோம்
யாவர்க்கும் மேலானோம் என்று இறுமாப்பு எய்தித்
திங்கள் முடியார் அடியார் அடியோம் என்று
திரிந்திடுவர் சிவஞானச் செய்தி உடையோரே."

சிவப்பிரகாசத்தின் பன்னிரண்டாஞ் சூத்திரப்பாவருமாறு.

"தொண்டர்கள்தாமும்வானோர் தொழும் திருமேனிதானும்
அண்டரும் கண்டிலாத அண்ணலே என வணங்கி
வெண்தரளங்கள் சிந்த விழி மொழி குழற மெய்யே
கண்டு.கொண்டு இருப்பர் ஞானக்கடல் அமுது அருந்தினோரே."

மேற்காட்டிய திருப்பாடல்கள் குருலிங்க சங்கமவழிபாட்டினை வலியுறுத்துகின்றன.

சிவஞான போதத்திற்கு மெய்கண்டார் இரண்டுவிதமான உரை செய்துள்ளார். முதலாவது உரை கருத்துரை. அது வசனநடையில் உள்ளது.

"அசிந்திதனாய் நின்ற பதியை (கடவுளை)ச் சிந்திதன் ஆகக் கண்டு வழிபடுமாறு உணர்த்துதல்" என்பது பன்னிரண்டாஞ் சூத்திரத்தின் கருத்துரை.

சிவஞான போதத்திற்கு மெய்கண்டார் அருளியமற்றோர் உரை வார்த்திகப் பொழிப்புரை.

வார்த்திகப் பொழிப்புரை ஒவ்வொரு சூத்திரத்தையும் முதலில் அதிகரணமாகப் பிரிக்கின்றது. ஒவ்வொரு அதிகரணத்திற்கும் மேற்கோள், ஏது, உதாரணம் தரப்படுகின்றன. மேற்கோளும் ஏதுவும் வசனங்கள். உதாரணம் வெண்பாக்கள்.

சிவஞானபோதத்தின் 12 சூத்திரங்களும், 39 அதிகரணங்களையும் உதாரணச் செய்யுளாக 80 வெண்பாக்களையும் கொண்டுள்ளன.

சிவஞானபோதப் 12ஆம் சூத்திரம் 4 அதிகரணங்களை உடையது. எனவே, நான்கு மேற்கோள், நான் ஏதுக்கள், ஆனால் உதாரண வெண்பாக்கள் ஏழு.

"தன்னை அறிவித்துத் தான்தானாச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழையலது – முன்னவனே
தானேதா னாச் செய்தும் தைவமென்றும் தைவமே
மானே தொழுகை வலி"

என்பது இறுதி வெண்பா.

இதிலே தன்னை அறிவித்துத் தான் தானாச் செய்தான் என்பது ஞானகுருவைக் குறிப்பதாகும்.

பன்னிரண்டாஞ் சூத்திரத்தின் முதலாவது அதிகரணம்

"செம்மலர் நோல்தாள் சேரல் ஒட்டா அம்மலங் கழீஇ"

இதற்குரிய மேற்கோள் ஆணவம் மாயை கான்மியம் என்னும் மலங்களைக்களைக. இரண்டாம் அதிகரணம் "அன்பரொடு மரீஇ". இதன் மேற்கோள்: சிவபத்தர்களோடு இணங்குக.ஏது:அல்லாதார் அஞ்ஞானத்தைஉணாத்துவர். மூன்றாவது அதிகரணம். "மால் அறநேயம் மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே." இதற்குரிய மேற்கோள், "பத்தரது

திருவேடத்தையும் சிவாலயத்தையும் பரமேசுரன் எனக்கண்டு வழிபடுக" என்பது.

ஒவ்வொரு சூத்திர அதிகரணத்திற்கும் சூர்ணிக்கொத்து உண்டு. 1. மும்மலங்களையும்களைக 2. சிவஞானிகளுடனேகூடுக. 3. சிவஞானிகளையும் சிவலிங்கத்தையும் சிவன் எனவே தேறி வழிபடுக. 4. வழிபடாமையை ஒழிக என்பன பன்னிரண்டாஞ் சூத்திரச்சூர்ணிக்கொத்து. சூர்ணிக்கொத்து மெய்கண்டார் அருளியவை அல்ல.

சிவஞான போதத்தின் சார்பு நூலாகிய சிவப்பிரகாசம் பன்னிரண்டாம் சூத்திரத்தை விரித்துரைக்கவில்லை. வழிநூலாகிய சிவஞான சித்தியார் ஏழு செய்யுளிலே விரித்துரைத்துளது. அவற்றில் பின்வரும் திருவிருத்தம் சங்கம வழிபாட்டுச் சிறப்பினைக்கூறுகின்றது. சங்கமவழிபாடு அடியார் வழிபாடு.

"ஈசனுக்கு அன்பு இல்லார் அடியவர்க்கு அன்பு இல்லார்
எவ்வுயிர்க்கும் அன்பு இல்லார்தமக்கும் அன்பு இல்லார்.
பேசுவது என்? அறிவு இல்லாப் பிணங்களை நாம் இணங்கில்
பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர் விடு நீ
ஆசையொடும் அரன்அடியார் அடியாரை அடைந்திட்டு,
அவர்கருமம் உன்கருமம் ஆகச் செய்து
கூசி மொழிந்து அருள்ஞானக் குறியில் நின்று
கும்பிட்டுத் தட்டம்இட்டுக் கூத்து ஆடித்திரியே."

இலிங்க வழிபாடு எனப்படும் திருக்கோயில் வழிபாட்டின் சிறப்புக்கூறும் சித்தியார்திரு விருத்தம் பின் வருவதாகும்.

"திருக்கோயில் உள்இருக்கும் திருமேனி தன்னைச்
சிவன் எனவே கண்டவர்க்குச் சிவன் உறைவன் அங்கே!
உருக்கோலி மந்திரத்தால்' என நினையும் அவர்க்கும்
' உளன் எங்கும் இலன் இங்கும் உளன்' என்பார்க்கும்
விருப்பாய வடிவாகு. இந்தனத்தின் எரிபோல்
மந்திரத்தில் வந்து உதித்து மிகும் சுரபிக்கு எங்கும்
உருக்காண ஒண்ணாதபால். முலைப்பால் விம்மி
ஒழுகுவதுபோல் வெளிப்பட்டு அருளுவன் அன்பர்க்கே.
[இந்தனம் - விறகு; சுரபி - பசு]

பின்வரும் சித்தியார்த்திருவிருத்தம் குருவழி பாட்டின் சிறப்பினைக் கூறுகின்றது.

"ஞானயோகக் கிரியா சரியை நான்கும்
நாதன்தன் பணி. ஞானி நாலினுக்கும் உரியன்
ஊனம் இலா யோகம்முதல் மூன்றினுக்கு உரியன்
யோகி கிரியாவான்தான் ஒண்கிரியையாதி
ஆன இரண்டினுக்கு உரியன் சரியையினில் நின்றோன்
அச்சரியைக்கே உரியன்ஆதலினால் யார்க்கும்
ஈனமிலா ஞான குருவே குருவும் இவனே
ஈசன்இவன் தான் என்றும் இறைஞ்சி ஏத்தே."

குருவேசிவம். குரு சீடனைச் "சிவமே ஆக்கும் பரிசித்தும் சிந்தித்தும் பார்த்துந்தானே"என்பது சித்தியார் இறுதியுரை.

எனவே 12ஆம் திருமுறையாகிய பெரிய புராணத்தின் பயனாகவும் சாதனை விளக்கமாகவும் 12 ஆம் சூத்திரம் விளங்குகின்றது.

# திருவருள் என்னும் பெரிய பொருள்

சைவசமயத்திலே சிறப்பாகச் சைவசித்தாந்த ஞானநெறியிலே மிக முக்கியம் பெற்று விளங்குவது திருவருள். சைவப்பத்திநெறியை வளர்த்த பெருமைக்குரியவர் காரைக்காலம்மையார். அவரே முதன் முதல் தேவாரத்திருப்பதிகம் பாடியருளியவர். இவர் அருளிய அற்புதத்திருவந்தாதி உலக அற்புதங்களிலே முதலிடம் வகிக்கத்தக்கது. அதிலே வருகின்ற ஒரு வெண்பா

"அருளே உலகெலாம் ஆள்விப்பது. ஈசன்
அருளே பிறப்பு அறுப்பது ஆனால் – அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதிஉடையேன். எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவது எனக்கு."

ஈசன் அருள் உலகினை ஆளுகின்றது. பிறப்பினை அறுக்கின்றது. அருளாலே மெய்ப்பொருளைக்காணலாம். எனக்கு எப்பொருளும் திருவருளே என்கின்றார் அம்மையார். பின்வந்த சமயகுரவர்கள் சந்தானகுரவர்கள் பலரும் திருவருள் என ஒரு பொருள் உண்டென வற்புறுத்தியுள்ளனர். திருவருள் என்னும் பெரும் பொருளைப்பற்றிய தனி நூலே திருவருட்பயன். சிவப்பிரகாசம் அருளிய உமாபதிசிவாசாரியர் அருளிய திருவருட்பயன் திருக்குறள் போலக் குறள் வெண்பாக்களால் ஆனது. சிவஞானபோதம் சித்தியார் சிவப்பிரகாசம் மூன்றின் கருத்துக்களையும் திருவருள் என்னும் பெரிய பொருளுக்கூடாகக்காட்டுவது. திருவருளின் பயன் அணைந்தோர் தன்மையாகும். அணைந்தோர் திருவருள் மயமான சீவன் முத்தர்கள். சிவஞான போதம் முதலியவற்றிலே பன்னிரண்டு சூத்திரங்களிலே கூறிய கருத்துக்களைப் பத்து அதிகாரமாகத் திருவருட்பயன் கூறுகின்றது என்பதும்

மனங்கொளத்தக்கது.

பொருள்கள் மூன்று என்பது சைவசித்தாந்தம். அவற்றில் முதன்மையானது பதியாகிய கடவுள். பதி சூரியன் எனில் சூரியனின் ஒளி போன்றது திருவருள். திருவருளுக்கு மற்றோர் பெயர் சத்தி. சத்தியைப் பெண்ணாகவும் சிவத்தை ஆணாகவும் உருவகிப்பர். சத்தியின்றேல் சிவம்இல்லை;சிவம் இன்றேல் சக்தி இல்லை. என்பது அருள் நந்தி சிவனாரின் அருள்வாக்கு. "அருளது சத்தியாகும் அரன்தனக்கு"எனவும், "அருளினால் ஆகமத்தே அறியலாம்" எனவும் மேலும் அருள் நந்தி சிவனார் கூறியருளியுள்ளார். திருவருள் நந்தி அவர்.

திருவருட்பயனின் முதற்குறள்" **அகர உயிர்போல் அறிவாகி எங்கும் நிகர் இல் இறை நிற்கும் நிறைந்து**" என்கின்றது. இரண்டாம் குறள்,' **தன் நிலைமை மன் உயிர்கள் சாரத் தரும்சத்தி பின்னமிலான் எங்கள் பிரான்**'என்கின்றது. உயிர்கள் யாவும் சிவமயமாகலாம். அதனைச் செய்வது சிவத்தைவிட்டு எங்கும் என்றும் நீங்காத திருவருட் சத்தி என்கின்றது மேற்படி குறள். அருளின்பெருமை அளவிடற்கரியது.

முதன் மூன்று அதிகாரங்களிலே முறையே முதுபதி, உயிர்கள் இருள்மலம் பற்றிக்கூறும் திருவருட்பயன் நான்காம் அதிகாரத்திலே திருவருள் பற்றியும், ஐந்தாம் அதிகாரத்திலே திருவருளின் உருநிலையே குரு என்பதனையும் நன்கு விளக்கிக் குருவருளினாலே முறையே அறியும் நெறியும், உயிரின் விளக்கமும், உயிர் இன்புறு நிலையும் பெறலாம் என்கின்றது.

"அருளிற் பெரியது இல்;" "எங்கும் அருக்கன் (சூரியன்) என நிற்கும் அருள்"எனக்கூறி உயிர்கள் திருவருளாகிய பாற்கடலுக்குள்ளே வாழ்ந்தும் திருவருளாகிய பாலை உண்ணாத மீன்கள்போல உள்ளன எனத்திருவருளை விளக்கஞ்செய்து ஐந்தாம் அதுகாரத்திலே அருள் உரு குரு எனவும் அருள்புரியவந்த பொருள் குரு எனவும் கூறுகின்றது.

குருவின் திருவருளினால் சிவஞானம் பெறலாம் என்பதே சைவசித்தாந்த அடிநாதம். பரம்பொருளே மானிடச்சட்டை தாங்கி வந்துள்ளார் என்பது சைவசித்தாந்தம்.

சைவசித்தாந்தப் பரம்பரை திருக்கைலாய ஞான பரம்பரைவழி வந்ததாகும். அது திருவருள் வடிவமாக வந்த பரம்பரை.

"எந்தைசனற்குமரன் ஏத்தித் தொழ இயல்பாய்
நந்தி உரைத்தருளும் ஞானநூல் – சிந்தை செய்து
தான் உரைத்தான் மெய்கண்டான் தாரணியோர் தாம் உணர
ஏதுதிருட் டாந்தத்தால் இன்று"

என்பது சிவஞானபோதச் சிறப்புப்பாயிரம்.

சிவஞானத்தை எளிதாகப்பெற்றுச் சீவன் முத்தராக இவ்வுலகில் வாழும் பொழுதே பேரின்ப நிலையில்வாழ வழிகாட்ட விநாயகர் முதலிய கடவுளர்களை வழிபடுவதுபோல முக்கியமானது சந்தான குருபரம்பரையினர் வழிபாடுமாகும்.

சிவஞான சித்தியாரிலுள்ள பின்வருங் குரு வணக்கம் சிவஞானம்பெற நற்றுணைபுரிவதாகும்.

"பண்டை மறை வண்டு அரற்றப், பசுந்தேன் ஞானம்
பரிந்து ஒழுகச், சிவகந்தம் பரந்து நாறக்,
கண்டவர் இதயகமல முகைகள் எல்லாம்
கண்திறப்பக்,காசினிமேல் வந்தஅருட்கதிரோன்
விண்டமலர்ப் பொழிபுடைசூழ் வெண்ணெய் மேவு
மெயகண்டதேவன் மிகு சைவநாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம்"

இது சித்தியார் பரபக்கப்பாடல். சுபக்கப்பாடல் பின் வருமாறு உளது.

"என்னை இப்பவத்தில்சேரா வகைஎடுத்து என் சித்தத்தே
தன்னைவைத்து அருளினாலே தாள்இணை தலைமேற் சூட்டும்
மின்னமர் பொழில்சூழ் வெண்ணெய் மேவிவாழ் மெய்கண்டான் நூல்
சென்னியிற் கொண்டு சைவத்திறத்தினைத் தெரிக்கல் உற்றாம்"

சிவப்பிரகாசம் சந்தான பரம்பரைக் குரவர்கள் பற்றிப்பின்வருமாறு கூறுகின்றது.

"தேவர்பிரான் வளர்கயிலைக்காவல் பூண்ட
திருநந்தி, அவர்கணத்தோர் செல்வர் பாரில்
பாவிய சத்தியஞானதரிசனிகள், அடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள், பதியா வெண்ணெய்
மேவியசீர் மெய்கண்டதிறலார், மாறா
விரவு புகழ் அருள்நந்தி விறலார், செல்வத்
தாவில் அருள் மறை ஞான சம்பந்தர் இவரிச்
சந்தானத்து எமை ஆளும் தன்மை யோரே".

சாமவேதபராசரமாமுனிவர் மரபுக்குரியவர் உமாபதி சிவாசாரியரின் குரு மறைஞானசம்பந்தர் என்பதையும் குரு சீடனின் எந்தை – தந்தை என்பதைப் பின்வருமாறு சிவப்பிரகாசம் கூறுகின்றது.

"பார்திகழ வளர்சாமவேதம் மல்கப்,
பராசரமா முனிமரபுபயில, ஞானச்
சார்புதர வந்தருளி எம்மை ஆண்ட
சைவசிகாமணி மருதைத் தலைவன் அந்தண்
கார்மருவு மெழில்புடைசூழ் மதில் மீதே மதியம்
கடவாமை நெடுங்காடியின் கரந்தகையும் கடந்தைச்
சீர்நிலவு மறைஞான சம்பந்தன் எந்தை
திருவளரும் மலா அடிகள் சென்னி வைப்பாம்.

இப்பாடல்கள் தோத்திரமாக ஓதத்தக்கவை. குருபாதம் வாழ்கவாழ்க.

# புகழ்த்துணை நாயனார்

சிவ. சண்முகவடிவேல்

புகழ்த்துணையார் செருவிலிபுத்தூரில் அவதரித்தவர். சிவ வேதியர். சிவபெருமானுக்கு அடித்தவம் புரிவதையே பெரும் பேறாகக் கருத்திற் கொண்டவர். தமக்குப் பிறிதொருவர் நிகரில்லாதவர். உலகிற் பரந்தோங்கிய புகழில் மேம்பட்டவர்.

புகழ்த்துணையார் தம்பெருமானைத் தவத்தாலே வழிபடுபவர். ஆகம சீலர். பூவும் நீரும் கொண்டு பொன்னடியைப் போற்றி வரும் நாளில் வானம் பொய்த்தது.

நீர்வளம் குன்றியதால் உணவு அருகியது. உணவு அருகப் பசி வருத்தியது. பசிவருத்த உடல் தளர்ந்தது.

புகழ்த்துணையாரைப் பசி வருத்தினாலும் பரம் பொருளை விடுவேன் அல்லேன்' என ஒழுகி வந்தார். என்றும் போலப் பூசனை அர்ச்சனை வழிபாடு நன்றே நிகழத் திருவருள் துணை நின்றது.

எம்பெருமானை இரவிலும் வழிபட்டார். பகலிலும் வழிபட்டார் புகழ்த்துணையார். கொத்துக் கொத்தாக அன்றலர்ந்த பூக்களைத் தேடிக் கொணர்வார். குளிர்ந்த தூய திருமஞ்சன நீரைக் குடத்திலே தாங்கி வருவார்.

மகாமேரு மலையை, வில்லாளும் பெருமானைத் திருமஞ்சன மாட்டுவார். இறைவனை அலங்காரம் செய்வார். சந்தனக் குழம்பு வாசனைத் திரவியங்கள் சாத்துவார், பூசிப்பார், வழிபடுவார், அர்ச்சிப்பாராயினார்.

புகழ்த்துணையார் நாளும் நலிவின்றிப் பெரும் பூசை ஆற்றுவது பெரும்பேறெனப் பேருவகை எய்திவந்தார். மிக இளைத்துப் பசிப்பிணியால் வருந்திய புகழ்த்துணையார் ஒருநாள் பெருமானுக்குத் திருமஞ்சனம் ஆட்டும் போது தம்நிலை தளர்வு அடைந்திருந்தார். அழகிய மஞ்சன நீர் நிறைந்த குடத்தைத் தாங்கமாட்டாதவரானார். தள்ளாடித் தாங்கியகுடத்தைத் தம்பெருமான் திருமுடி மீது தவறவிட்டார்.

அந்நிலையைச் சேக்கிழார் பெருமான், சொல்லோவியமாக்கித் தரும் தமிழ்ச்சுவை தனியானது:

> "மாலயனுக் கரியானை மஞ்சனமாட் டும்பொழுது
> சாலவுறுபசிப்பிணியால் வருந்திநிலை தளர்வெய்திக்
> கோலநிறை புனல்தாங்கு குடந்தாங்க மாட்டாமை
> ஆலமணி கண்டத்தார் முடிமீது வீழ்த்தயர்வார்."

அப்பொழுது சிவபிரான் திருவருளால் புகழ்த்துணையாருக்குத் துயில் வந்தது. துயிலில் கனவு வந்தது. கனவில் கண்ணுதலார் வெளிவந்தார். திருவருள் பாலித்துப் பின்வருமாறு திருவாய் மலர்ந்தருளுவார்.

" உண்ணும் உணவு குறைந்த காலம் நீங்கும் அளவும் இங்கு பீடத்தில் காசு ஒன்று வைப்போம்."

இறைவன் மறைந்தருளினார். கனவு கலைந்தது. கவலை கையகன்று ஓடியது. களித்த மனத்தவராகி எழுந்தார், புகழ்த்துணையார்.

"அருந்துணவு மங்கியநாட் கழிவளவும் வைப்பதுநித் தமுமொருகா சிங்குனக்கு நாம்." என்னும் இறைவர் வாக்குப் புகழ்த்துணையார் உணர்வில் இன்னொலியாக ஒலித்துக் கொண்டிருந்தது.

சிவபிரான் திருவாக்கின் படி அருள் பாலித்தார். புகழ்த்துணையார் பீடத்தின் கீழ் காசு பெற்றுக் கொண்டார். முற்றுணர்வு நிரம்பினார். வணங்கினார். வந்தித்தார்.

அன்றை நாள் போன்று எந்நாளும் எம்பெருமான் காசு அளித்தார். வருத்தும் பசிநோய் விளைத்த நாள் நீங்கியது.

மின்னல் போன்று பிரகாசிக்கும் செஞ்சடையாருக்கு மீளாவடிமைத் தொண்டு செய்தார். மெய்யன்போடு செய்தார் புகழ்த்துணையார்.

அப்பேறாகப் புகழ்த்துணையார் சுவர்க்க உலகத்துத் தேவர்கள் பாதம் பரவப் பந்தணையும் மெல்விரலாள் பாகத்தர் திருவடி நீழல் எய்தப்பெற்றார்.

பொருள் சம்பாதிக்கும் நெறிகளாவன: வித்தை கற்பித்தல், உயிர்க்கு
உறுதி பயக்கும் நூல்களையும் உரைகளையுஞ் செய்து வெளிப்படுத்தல்,
வேளாண்மை, வாணிகம், இராசசேலை, சிற்பம் முதலியவைகளாம்.

நாவலர் நான்காம் பாலபாடம்

கொழும்பு

# ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வர சுவாமி தேவஸ்தானம்

பிரம்ம ஸ்ரீ சோ. குஹானந்த சர்மா

### நித்திய பூஜை

இவ்வாலயத்தில் தினமும் சிவாகம முறைப்படி ஆறு காலப் பூஜைகள் நிகழ்கின்றன. முதலாம் காலப் பூஜையில் சுவாமிக்குப் பால், பழம் நைவேத்திய மாகின்றன. உச்சிக் காலப் பூஜையின்போது தலைவாழை இலையில் சாதம், கறி, குழம்பு என்பன நிவேதிக்கப்படுகின்றன. இரவு அர்த்தசாமப் பூஜையின்போது அப்பம், வடை, பழம் என்பன நிவேதனப் பொருள்களாக அமைகின்றன. இப்பூஜைகளில் வேதம், ஆசீர்வாதம், பஞ்சபுராணம் என்பன இடம்பெறுவது வழக்கம். அர்த்த சாமப் பூஜையில், சுவாமியும் அம்பாளும் திருப்பள்ளியறைக்குச் சென்று திருவூஞ்சலில் அமர்ந்தபின் பூஜைகள் நடைபெறுகின்றன.

### நித்தியாக்கினி

"ஜோத அக்நோ ருத்ரெள" என்கின்றது வேதம். அதாவது சிவபெருமான் அக்னி வடிவினன் என்பதாம். அதற்கமைய ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரத்தின் மஹா மண்டபத்தில் மூல மூர்த்திக்கு நேரே ஹோம அக்னி குண்டத்தில் சிவாச்சார்யர் நித்தியாக்கினி வளர்க்கின்றார். தேவாரத்திற் கூறப்படும் "எரி ஓம்புதல்" என்பது இதனையும் குறிக்கும்.

### நித்தியோற்சவம்

நித்திய அக்னி வளர்த்து முடிந்ததும் துவார பாலகர்கள், ரிஷபம், பலிபீடம் என்பனவற்றுக்கும் பலிபோடப்பட்டுச் சிவாச்சார்யரின் வழிபாடு நிறைவெய்தியதும் உள்வீதியில் உரிய இடங்களில் பலிபோடப்பட்டு மஹா பலியானது தம்ப மண்டபத்தின் பலிபீடத்தில் இடப்படுகிறது.

தூபம், தீபம், மங்கள வாத்தியங்கள் முன் செல்ல அழகிய திருத்தண்டிகையில் சுவாமியும் அம்பாளும் இவ்வேளையின்போது திருவீதி உலா வருகின்றனர். இருபிராமணர்கள் சிவத்தியானத்துடன் திருப்பல் லக்கைச் சுமந்து வர, பக்த கோடிகள் பஞ்சாட்சர ஜபத்தோடு சுவாமியுடன் தினமும் திருவீதியுலா வருவது பக்தியமான ஒரு காட்சி என்றே கூறவேண்டும். இவை காலையும் மாலையும் இரண்டாங் காலப் பூஜையின் பின் நிகழ்கின்றன. இலங்கையில் ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரத்தில் மட்டுமே நித்தியாக்னி, நித்தியோற்சவம் என்பன நிகழ்வது, இவ்வாலயத்துக்கே உரித்தான சிறப்பம்ஷம் எனலாம்.

### பட்ச உற்சவம் - பிரதோஷக்காட்சி

சிவவிரதங்களிற் பிரதோஷ விரதம் சிறப்பானது. மானிட வாழ்வில் இவ்விரதத்தை நோற்று நன்மை பெற்றோர் பலர் எனலாம். இம்மகோன்னத விரத பூஜை இத்தேவஸ்தானத்திற் கிரமமாக நிகழ்கின்றது. திருநந்தி அபிஷேகம், சுவாமி அம்பாள் அபிஷேகம் என்பன குறித்த காலத்தில் நிகழ்ந்த பின் சுவாமிகளுக்குத் திரு அலங்காரஞ் செய்யப்படுகின்றது. பிரதோஷ பூஜை முறைக்கமைய முதலில் விரிவான பூஜை திருநந்திக்கு நிகழ்ந்த பின் சிவன், அம்பாளுக்கு நிகழ்கின்றன. இப்பூஜையின்போது திருநந்திக்கு விசேஷமாக அறுகம்புல் மாலை சாத்தி அவருக்கு முன் ஒரு தேங்காயை உடைத்து இரு பாதிகளிலும் நெய்விட்டு நெய்விளக்கு ஏற்றப்படுகின்றது. பிரதோஷ பூஜையில் " காப்பரிசி" நிவேதனம் முதன்மையானது எனலாம்.

வசந்த மண்டபத்தில் வெள்ளி ரிஷப வாகனத்தில் சுவாமியும் அம்பாளும் வீற்றிருக்கத் தீபாராதனை, பூஜை, வேதம், ஆசீர்வாதம், பஞ்ச புராணம் என்பன இடம்பெற்ற பின் சுவாமியும், அம்பாளும் வெள்ளிவாகனத்தில் எழுந்தருளும் காட்சி ஆனந்தமயமானது. சோமசூத்திரப் பிரதக்ஷிணம், பஞ்சாட்ஷர ஜபத்துடன் பக்தர்களால் மேற்கொள்ளப்படுவதும் இவ்வாலயத்தின் ஓர் சிறப்பம்சம் எனலாம்.

### மாத உற்சவம்

### சங்கிராந்தித் தீர்த்தம்

பிரதி மாதம்பிறப்பன்றும் சங்கிராந்தித் தீர்த்தம் இங்கு நிகழ்கின்றது. அதன்பின் வழமையான பூஜைகள் நிகழ்கின்றன.

### பூரணை

இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சிவகாமசெளந்தரி அம்பாள் அருட்கடா ட்சங்கொண்டவள் ஆவாள். எனவே பூரணைத் தினங்களில் விசேஷ அபிஷேகம் நிகழ்ந்த பின் ஸ்ரீ சக்ர பூஜை நடைபெறுகின்றது. அதனைத் தொடர்ந்து மூல அம்பாள் பூஜை, வசந்த மண்டபத்தில் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பூஜை நடைபெற்ற பின் அம்பாள் உள்வீதி வரும் திருவிழாவும் இடம்பெறுகின்றது.

### சதுர்த்தி

விக்ன விநாயகப் பெருமானின் சதுர்த்தித்

தினத்தில் அவருக்கு அபிஷேகம், பூஜை என்பன செய்யப்படுகின்றன. ஆவணிச் சதுர்த்தியன்று விநாயகப் பெருமான் வீதியுலா வருகின்றார்.

**கார்த்திகை**

மாதாமாதம் கார்த்திகைநட்சத்திர தினத்தில் சுவாமிக்கு அபிஷேகம், பூஜை, வசந்த மண்டப பூஜை எல்லாம் நடைபெற்ற பின் மயில்மீதமர்ந்து அம்பாள்மார் சகிதம் முருகப் பெருமான் வீதியுலா வருகின்றார். திருக்கார்த்திகைக் குமாராலயதீபத் தினத்தில் ஆலயப் பூஜைகளோடு முருகன் சந்நிதியில் திருவிளக்குகள் பலவற்றைக் காணமுடியும்.

**வருஷ உற்சவம்**

**மணவாளக் கோலம் – தைப்பூசம்**

தைப்பூசம் இங்கு மணவாளக் கோல விழாவாக அமைகின்றது. ஆகவே சுவாமிக்கும் அம்பாளுக்கம் 1008 சங்குகள் வைத்துச் சிறப்பான சங்காபிஷேகம் நிகழும்போது ஆலயத்தில் எழுந்தருளியுள்ள எல்லா மூர்த்திகளுக்கும் அபிஷேகம் நிகழ்கின்றது. மாலையில் மும்மூர்த்திகளும் திருவீதியுலா வருகின்றனர்.

**வைகாசி விசாகம்**

முருகப் பெருமானுக்கு அபிஷேகம், பூஜை நடைபெற்றுத் திருவிழா நிகழ்ந்து வருகின்றது.

**ஆவணி மூலம்**

பிட்டுக்கு மண் சுமந்த காட்சிக்காக அம்பாளோடு சிவபெருமான் ரிஷப வாகனத்தில் எழுந்தருளுகின்றார்.

**ஸ்ரீ விஷ்ணு உற்சவம்**

ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி. புரட்டாதிக் கடைசிச் சனி, வைகுண்ட ஏகாதசி ஆகிய திருநாட்களில் ஸ்ரீ விஸ்ணு பகவான் வீதியுலா வருகின்றார். சனி தோஷ நிவிர்த்திக்காக ஒவ்வொரு புரட்டாதிச் சனிக்கிழமையும் மாலையில் ஸ்ரீ விஷ்ணு அபிஷேகம், பூஜை, நடைபெற்றுச் ஸ்ரீ விஷ்ணு சூக்தம், திருவாய் மொழி என்பன இடம்பெறும்போது பல நூற்றுக் கணக்கான பக்தர் வழிபாடு செய்வதைக் காணமுடியும்.

**நவராத்திரி**

நவராத்திரி காலத்தில் தினமும் அம்பாள் அபிஷேகம், ஸ்ரீ சக்ர பூஜை, கொலு பூஜை என்பன பக்தி பூர்வமாக நடைபெற்று மானம்பூத் தினத்தன்று உற்சவம் சிறப்புற இடம்பெற்று வருகின்றது.

விஜய தசமியன்று நூற்றுக்கணக்கான சிறார்களுக்கு ஏடு தொடக்கப்படுகின்றது.

**கந்தசஷ்டி**

இவ்வாலயத்திற் கந்தசஷ்டி உற்சவம் யாக பூர்வமாக நடைபெற்று வருகின்றது. தினமும் அபிஷேகம், பூஜை, யாக பூஜை, யாக தர்சனம் என்பன நடைபெற்று சூரசம்ஹார தினத்தில் மிக விமர்சையாகச் சூரசம்ஹாரக் காட்சி நடைபெறுகின்றது. பல நூற்றுக்கணக்கான பக்தர் இதனைக் கண்டு களிப்புறுகின்றனர். மறுநாள் ஸ்ரீ ஷண்முகர் திருக்கல்யாணம், உற்சவம் என்பன நடைபெறுகின்றன.

**திருக்கார்த்திகை**

சர்வாலய தீபத்தன்று பிள்ளையார், முருகன், சுவாமி அம்பாளுடன் எழுந்தருளிச் சொக்கப்பனை எரிக்கப்படும் காட்சி சிறப்புறச் செய்யப்படுகினறது. ஆலயம் முழுவதும் ஸ்தூபி, கோபுரம் எங்ஙணும் தீப அலங்காரம் கண்கவர் காட்சியாகும்.

**கார்த்திகைச் சோமவாரம்**

சோம வார நாட்களில் மாலையிலே அபிஷேகம், பூஜை, உற்சவம் ஆகியன உள. கடைசிச் சோம வார தினத்தன்று 1008 சங்காபிஷேகம், பூஜை, உற்சவம் என்பன இடம்பெறுகின்றன.

**திருவெம்பாவை**

திருவெம்பாவை விழா அதிகாலையில் வழமைபோல இங்கு நடைபெறுகின்றது. பத்தாம் நாள் திருவாதிரைத் தினத்தன்று ஸ்ரீ நடராஜருக்கும் அம்பாளுக்கும் விரிவான அபிஷேகம் நடைபெற்ற பின் பூஜை, உற்சவம் என்பன இடம்பெற்று வருகின்றன. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அஞ்சல் இக்காலத்தில் இடம்பெறும்.

**விசேஷ தின வழிபாடுகள்**

மஹா சிவராத்திரி தினத்தில் லிங்கோற்பவருக்கு விசேஷ அபிஷேகம், நிகழ்கின்றது. விரிவான தீபாராதனையைத் தொடர்ந்து லிங்காஷ்டகம் சொல்லி வில்வம் இலையால் அர்ச்சனை செய்யப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து மூலவருக்குப் பஞ்சமுக அர்ச்சனை இடம்பெறுகின்றது. நான்கு கால அபிஷேகம், கிராமமாக இங்கு நடைபெறுவது வழக்கம்.

**ஸ்ரீ நடராஜர்**

ஸ்ரீ நடராஜர் அபிஷேக நாட்களில் விசேஷ அபிஷேகம், பூஜையும் உற்சவமும் செய்யப்படுகின்றன.

திருவாதிரையன்று பிட்டு, களி ஆகியன விசேஷ நைவேத்தியமாகும்.

### அக்கினி நாள் (காண்டாவனம்)

இக்காலம் வெப்பம் மிகுந்த காலம் ஆகும். இதற்காக இங்கு விசேஷ பூஜை உள்ளது. ஒரு மண்பானையில் அடியில் ஒரு சிறு துவாரம் இடப்படுகின்து. சிவலிங்கத் திருமேனியின் மேலே ஓர் உறியில் இப்பானை வைக்கப்பட்டு அடித்துவாரத்தில் இருந்து கொண்டுவரப்படும் நூல் சிவலிங்கத் திருமேனியின் மேல் வைக்கப்படுகின்றது. தினமும் காலைப் பூஜையின் போது பானை நிறையத் திருமஞ்சனத் தீர்த்தம் இடப்படுகின்றது. இத்தீர்த்தம் 24 மணிநேரமும் நூலினூடாக வந்து சிவலிங்கத் திருமேனியைக் குளிரச் செய்த வண்ணம் உள்ளது. விசேஷ நைவேத்தியமாகத் தயிர்ச்சாதம் நிவேதிக்கப்படுகின்து. சூடு சம்பந்தமான நோய்களினின்றும் காக்க உள்ள வழிபாடு இதுவாகும்.

### கிரக வழிபாட்டுமேன்மை

செவ்வாய், வெள்ளி, சனி ஆகிய தினங்களில் சிவதுர்க்கை வழிபாடு பக்தர்களால் மேற்கொள்ளப் படுகின்றது. சனி, இராகு, கேது தோஷம், திருமணத்தடை, நீதி, வியாபாரம் சம்பந்தமான விடயங்களுக்குப் பக்தர்கள் சிவதுர்க்கை வழிபாடுகளை இங்கு செய்கின்றனர்.

ஸ்ரீ தட்சணாமூர்த்தி வழிபாடு வியாழக் கிழமைகளில் நடைபெறுகின்து. வியாழ பகவானின் தோஷங்களில் இருந்து நீங்க இங்கு கிரமமான வழிபாடுகள் இடம்பெறுகின்றன.

### சனி வழிபாடு

பிரதி சனிக்கிழமைகளிலும் சனி தோஷம் உள்ளவர்கள் சனி வழிபாடுகளைச் செய்கின்றனர். சனியுடன் ஏனைய கிரக தோஷங்கள் இருந்தால் நவக்கிரக வழிபாடுகளைச் செய்கின்றனர். சோதிடர்கள் அறிவுரைகளுக்கமைய இவை நிகழ்கின்றன. சிவன், அம்பாள். விஷ்ணு, பிள்ளையார், முருகன், துர்க்கை வழிபாடுகளும் சனிக்கிழமைகளில் பக்தர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. புரட்டாதிச் சனிக்கிழமைகளில் பக்தர்கள் உரிய முறையில் வழிபாடுகளைச் செய்வதைக்காணலாம்.

### மஹோற்சவம்

தின. வார, மாத, வருட, பூஜை, உற்சவக் கிரம முறைகளை நோக்கிய நாம் இனி மஹோற்சவம் பற்றி அறிந்து கொள்வோம். பங்குனி உத்தரத்தை அந்தமாகக்கொண்டு நவதின உற்சவம் இங்கு நடைபெகின்றது. ரிஷபவாகனம் பூதவாகனம் திருத்தண்டிகை என்பன சிவனின் வாகனங்கள். தேர்த்திருவிழாவன்று பஞ்க ரதபவனி சிறப்புற இடம்பெறுகின்றது. மாலையில் பிட்சாடனர் உற்சவம் சிறப்புற இடம் பெறுகின்து.

ஸ்ரீ சுவர்ண புஷ்கரணித் தீர்த்தத் தடாகத்தில் வருடாந்த தீர்த்தத் திருவிழா பெருவிமர்சையாகப் பக்தியுடன் இடம்பெறுவதை இங்கு கூறுதல் நன்று. மாலையில் திருக்கல்யாணம், கொடியிறக்கத்துடன் மஹோற்சவம் சிறப்புற நிறைவெய்துகின்து.

### சிவகாமசௌந்தரி - ஆடிப்பூரம் உற்சவம்

ஸ்ரீ சிவகாமசௌந்தரி அம்பாள் உற்சவமாக ஆடிப்பூரத்தை அந்தமாகக் கொண்டு பத்துத் தினம் உற்சவம் நிகழும். அபிஷேகம், பூஜை, ஸ்ரீசக்ர பூஜை, விசேஷ ஹோமம் என்பன தினமும் இடம்பெறும். மாலையில் அம்பாள் வீதியுலா வருகின்றார். ஆடிப்பூரத் தினத்தன்று பூர்வகர்மம், நிகழ்ந்தபின் விசேஷ தீபாராதனை, குங்குமம், ஜாதிப்பத்திரியும் காசும், தாமரைப்பூ ஆகியனகொண்டு அர்ச்சனை நடைபெறுகின்றது. பின்னர் ஹோம குண்டத்தில் சதுர் சஷ்டி பூஜை, விசேஷ திரவ்யஹோம பூர்த்தி, திருவீதியுலா என்பன சிறப்புற நிகழ்கின்றன. மறுநாள் காலையில் 108 சங்கு அபிஷேகம், பூஜைக்குப்பின் சுமங்கலி பூஜை என்பன இடம்பெறுகின்றன.

### திருவூஞ்சல்

மார்கழித திருவாதிரைக்கு முதல் நாளும், ஆடிப்பூரத்தின் மறுநாளும் திருவூஞ்சல் இங்கு நடைகெறுகின்றது. 1903 ஆம் ஆண்டில் திரு. பரமனாந்தப் புலவர் அவர்களாற் பாடபப்பட்ட திருவூஞ்சற் பாக்கள் பாடப்படுகின்றன. திருவூஞ்சற்பாவிலே திருவைந் தெழுத்துக்கும் திருநீறுக்கும் உரிய முறையில் வாழ்த்துக் கூறப்படுவதிலிருந்து சைவத்தின் மகத்துவம் நன்கு விதந்துரைக்கப்படுவதை நோக்கலாம்.

ஞான நூலை வேதனத்தின் பொருட்டுக் கற்பித்தலாகாது.

நாவலர் நான்காம் பாலபாடம்.

# அன்று இலைமறைகாய், இன்று அங்கை நெல்லிக்கனி

பண்டிதர் ச. சுப்பிரமணியம்

கச்சிக் கந்தகோட்டத்துக் கந்தன்கருணை கைதரக் கச்சியப்பசிவாசாரியர் அருளியது கந்தபுராண அருள்நூல். அந்நூல் அப்பெருமான் சந்நிதியில் அரங்கேற்ற விழா ஆரம்பம். கச்சியப்பர் காப்புப்பாடல் பாடி உரைகூறத் தொடங்குகிறார். காப்பின் முதற் சொற்றொடர் "திகடசக்கரம்" என்பதிலேயே அவையின் ஒருவர் ஆட்சேபம் எழுப்பினார்.

"திகழ் +தசம் என்பது திகழ்தசம் எனச்சேர்வதல்லது, திகடசம் எனச் சேர்வதற்கு விதி எவ்விலக்கண நூலில் உள்ளது" என வினாவினார். அவையோரும் இதற்கு விடைகண்டபின்பே அரங்கேற்றம் தொடரலாம் என்றனர். நிரூபிக்க விதி கண்டிலர். விழா மறு நாளுக்குத் தள்ளி வைக்கப்பட்டது.

கவலையோடிருந்த கச்சியப்பர் கனவில் கந்தன் அருளிச்செய்தபடி மறுநாள் "வீரசோழிய" இலக்கண விதிகண்டு அவையோர் ஏற்கவே அரங்கேற்றம் இனிது நிறைவானது என ஒருகுறிப்புக் காணப்படுகிறது. இது மரபு வழி ஆன்றோர்கள் அறிஞர்கள் ஏற்றுக்கொண்ட காரியம்.

ஆனால் ழகரவீறு தகரத்தின்முன்கெடத்தகரம் டகரமாய்வருவதற்கு அருளாளர்களாகிய ஆன்றோர் களின் வழக்குகள் உள என்பதைச் சில சான்றுகள் காட்டி நிரூபிக்க இடமுண்டு என்பது கட்டுரையின் நோக்கம்.

ஞானபோனகர் முத்தமிழ்விரகர் முருகனின் அவதாரம் எனப்படும் சம்பந்தப் பிள்ளையாரின் சரிதம்பாடிய சேக்கிழார் சுவாமிகள் கூற்று 'தமிழ்ப்புலவர்கள் முறையறிந்து கவிதைகள் பாடுவதற்கு வழிப்படுத்தும் மூல இலக்கியங்களாக விளங்கும்படி பலவித சித்திரக்கவிகளும் அருளினர்" என அவற்றின் பெயர்களும் குறிப்பிட்டுள்ளார். அவர்கள் பாடிய பாடல்களேயன்றி அவர்கள் அருளிய சொல்லாட்சி முதலியனவும் மூல இலக்கியமே.

திருமுறை முதலிகளிலே காலத்தால் மிக முற்பட்டவரும் ஆகமப் பொருளைத் திருமந்திரமாக அருளியவருமாகிய திருமூலர் பாடல்களும் மூல இலக்கியங்களே. இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயப்புதலே வழக்காறு.

தொல்காப்பியத்தின் பின்வந்தவை திருமுறை நூல்களாயினும் இவற்றின் பின்தோன்றிய உரையாசிரியர்களும் வீரசோழியம் தவிர ஏனைய இலக்கண நூலாரும் கண்டுகொள்ளாத இலைமறை காயாயிருந்தன. அவை முக்கனிபோலச் சுவைதருவன. கச்சியப்பருக்கும் கரியாவன. பழைய உரையா சிரியர்பலரும் பலவிடத்தும் இலக்கிய வழக்கையே ஆதாரம் காட்டுவர். மேலே சில இலக்கியச் சான்றுகள் உள. அவையாவன:

அவற்றுள் முன்னைப் பழமும் முக்கனிகளை ஒரு குலையில் தாங்கியதுமான மூலர் அருளிய மூல இலக்கியம் வருமாறு:

திருமந்திரம் 8ம் தந்திரம் 182ம் பகுதி 16ம் பாடல் (2420)

"விட்கும் பதிபசு பாசமும் மீதூற
வாட்கும் இருவினை ஆங்கவற் றாலுணர்ந்து
தாட்கும் சுவர்க்க நரகத்தில் தானிட்டு
நாட்குற நான்தங்கு நாற்பாசம் நண்ணுமே"

பாடலில் முதல் மூன்றடியின் முதலிலும் வீழ்க்கும், ஆழ்க்கும், தாழ்க்கும் என அமையவேண்டியவை. ஆனால் ழகரமெய் ககர எழுத்தின்முன் டகர ஒற்றாக மூன்றிடத்தும் விகாரமாகப்புணர்ந்தன. அவை நாட்குற என்னும் எதுகைத்தொடருக்காக விகாரமாயின. ஆகவே ழகரம் டகரமாகும் இலக்கியவழக்கு முன்னும் உளவேயாம்.

மேலும் மூல இலக்கிய கர்த்தாவான முத்தமிழ்விரகர் சொல்லாட்சியையும் நோக்குவோம்.

• முதலாம் திருமுறை 59ம் பதிகம் 10ம் பாடல் திருக்கடந்தை தூங்கானை மாடக்கோயில்'

பகடூர் பசிநலிய நோய் வருதலால்
பழிப்பாய வாழ்க்கை ஒழியத்தவம்
முகடூர் மயிர்கடிந்த செய்கையாரும்
மூடுதுவ ராடையரும் நாடிச்சொன்ன
திகடீர்ந்த பொய்மொழிகள் தேறவேண்டா
திருந்திழையும் தானும் பொருந்தி வாழும்
துகடீர் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடம் தொழுமின்களே

இத்தேவாரத் திருப்பாடலில் பகடூர், முகடூர், துகடீர்" என்ற மூன்று எதுகைத் தொடைகளை நோக்கி

மூன்றாமடி அடி முதற் சீர் திகழ்தீர்ந்த என அமைய வேண்டியது. "திகடீர்ந்த" என விகாரமாகி நின்றது.

சம்பந்தர் மூன்றாம் திருமுறை எண்பத்தாறாம் பதிகம் பத்தாம் பாடல்

"துகடுறு விரிதுகிலுடையவர் அமணெனும் வடிவினர்
விகடம துறுசிறு மொழியவை நலமில வினைவிடல்
முகிடரும் இளமதி அரவொடும் அழகுற முதுமதி
திகடரு சடைமுடி அடிகள்தம் வளநகர்சேறையே"

மேலே காட்டிய தேவாரப்பாடல் இரண்டும் சமண்பாட்டான பத்தாம் பாடல்கள்

துகள் + துறும் - துகடுறும் முகிழ்+தரும் முகிடரும்

திகழ்+தரும் திகடரும் எனப் பிள்ளையார் திருவாக்கில் ழகரம் மொழியீறாய் நிற்கத்தகர முதல்மொழி புணரவரும்போது ளகரம்போல் ழகரமும் கெடுதல் விகாரம் பெறத் தகரமும் டகரமானது திகடரும் என்பது திகடசம் போல அமைய விகடச் சொல்லும் வந்துளது.

இவையன்றித் திருமுறைகளை வகுத்தருளிய திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி அருளிச் செய்த திருத்தொண்டர் திருவந்தாதியினுள்ளே நாற்பத்தோராம் பாடல் சாக்கிய நாயனாரைப்பற்றியபாடல்

"தகடன ஆடையன் சாக்கியன் மாக்கற் றடவனரயின்
மகடனம் தாக்கக் குழைந்த தின்டோளன் கம்பர் செம்பொன்
திகடரு மேனியிற் செங்கல் எறிந்து சிவபுரத்து
புகடரப் புக்கவன் ஊர்சங்க மங்கை புவனியிலே"

இப்பாடலிலும் திகழ்+தரு, புகழ்தர என இயல்புப் புணர்ச்சியாக இருக்கவேண்டியவை முதலாம் இரண்டாம அடிகளின் எதுகைத் தொடைநோக்கி" திகடரு, புகடர" என ழகரத்தின் முன்' தகரம் சேரும் போது ழகரம் கெட்டுத்தகரம் டகரமாய் விகாரம் பெற்றது.

திருமுறைப்பாடல்களிலே மிகத் தொன்மையான திருமந்திரத்திலிருந்து பன்னிரண்டாம் நூற்றாண்டின் பின் தோன்றிய 11ம் திருமுறை வரையிலுள்ள பாடல்களில் பல இடங்களில் திகடசக்கரச் சொல்லாட்சிக்குச் சான்றுகள் உள்ளன என்பதற்கு வீரசோழியம் வேண்டாமலே சான்றோர் இலக்கிய மேற்கோள்கள் காட்டினோம்.

இந்நாளில் சந்திபிரித்து அச்சிட்டு வெளிடப்படும் நூல்களிலே இந்தச் சந்திகள் சந்திசேராமல் பிரித்திருப்பார்கள். அவற்றைப் பார்த்துப் பயனில்லை. பழையபதிப்புகளைப்பார்த்து அறிவார்களாக.

**ஈசுர வைகாசி இதழில் வெளியான பயில்வோர் பயிற்சிக்கான விடைகள்**

1. ஐந்தொழில் நிகழ்த்துவதனால் உலகம் இயங்குகிறது.
2. உயிர்கள் மேல் வைத்த அருளினால்
3. சிவலிங்கத் திருமேனி
4. அறிவு
5. வியாசமுனிவர்
6. இருக்கு. யசுர், சாமம், அதர்வணம்
7. சுருதி அல்லது எழுதாக்கிளவி
8. சங்கிதைகள், பிராமணங்கள்,ஆரணீயகங்கள், உபநிடதங்கள்
9. உபநிடதங்கள்
10. கர்மகாண்டம், உபாசனாகாண்டம், ஞானகாண்டம் என மூன்று
12. சாமம்
13. சுக்கில யசுர் வேதத்தில் பதினாறாம் அத்தியாயம்
14. சங்கரன், சம்பு, சிவன், சிவதரன், நீலக்கிரீவன், பசுபதி
15. அரப்பா, மொகெஞ்சொதாரோ
16. மறைபொருட்கோட்டாட்பாடுகளை அறிவுறுத்தம் ஓர் ஆசிரியரின் அடியில் இருந்து கேட்டல்
17. 108
18. சங்கரர்
19. உண்மைபேசு,
    அன்னையைத் தெய்வமாகப் போற்று,
    தந்தையைத் தெய்வமாகப் போற்று,
    ஆசிரியரைத் தெய்வமாகப் போற்று
20. பிருகதாரணியக உபநிடதம், ஈச உபநிடதம், சுவேதாஸ்வதர உபநிடதம், கட உபநிடதம், பிரசின உபநிடதம்

# மறைஞான சம்பந்தர்

அருள்மொழி அரசி திருமதி வசந்தா வைத்தியநாதன்

ஈராண்டிற் சிவஞானம் பெற்றுயர்ந்த மெய்கண்டார் இணைத்தாள் போற்றி
காராண்ட பல்லடியார்க்கு அருள்புரிந்த அருணந்தி நற்றாள் போற்றி
நீராண்ட கடந்தைநகர் மறைஞான சம்பந்தர் நிழற்றாள் போள்றி
சீராண்ட தில்லைநகர் உமாபதியார் செம்பதுமத் திருதாள் போற்றி.

சிவநெறியிற் கொள்ளப்படும் அடிப்படை உண்மைகளையும் கொள்கைகளையும் முறைப்படுத்தி அங்கைநெல்லியென நமக்குத் தந்தவை பன்னிரு திருமுறைகளும் பதினான்கு சாத்திரங்களுமாம். இவை அனைத்தும் சைவசிந்தாந்தப் பதிவுகளென்க.

"குடிலை யென்னும் தடவய னாப்பண்
அருள் வித்திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேதமென்னும் மாதவம் வளர்த்தனை
மாதவமதனிற் படுபயன்பலவே – அவ்றுள்
இலைகொண்டு வந்தனர் பலரே யிலையோரீஇத்
தளிர் கொண்டு வந்தனர் பலரே தளிரோரீஇ
அரும்பொடு மலர் பிஞ்சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டு கொண்டுவந்தனர் பலரே
அவ்வாறுறுப்பு மிவ்வாறு பயப்ப
ஓரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த
ஆராஇன்ப அருங்கனி பிழிந்து
சாரங்காண்ட சைவசித்தாந்தத்
தேனமுது அருந்தினர் சிலரே".

என்பர் குமரகுருபர அடிகள். அரிய பிறவியாகிய மானிடப்பிறவியே இறைவனை உணரும் பிறவி. பிறவிப் பயன் பிரான் கழல் பேணுதலே.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்"

சமய உண்மைகளையும், தத்துவங்களையும் சற்குரு மூலமாகவே அறியவேண்டும். பிறபொருள்களை யாவரிடத்திலும் பெறுதல் கூடும். ஆனால் ஞானம் குருவையன்றிப் பிறரிடத்திற் பெற இயலாது. இதனை

"ஞானம் இவனொழிய் நண்ணியிடும் நற்கல் அனல்
பானு ஒழியப் படின்"

இது உமாபதி தேவரின் திருவருட் பயன். சூரியன் இல்லாமலே சூரியகாந்தக் கல்லிடத்துத் தீ தோன்றுமேயாயின் குரு வில்லாமலே ஞானத்தைப் பெறுதலும் கூடும். முன்னது எப்படிக் கதிரவன் இன்றி அமையாதோ அதேபோன்று ஞானமும் குருவின்றி அமையாது. மேலும் உமாபதியார்.

"எமக்கென் எவனுக் கெவைதெரியும் அவ்வத்
தமக்கவனை வேண்டத் தவிர்."

என்பார். அஃதாவது ஒவ்வொரு துறையிலும் சென்று அதிற் பயன்பெற விரும்புவோர் யாவரும் அவ்வத்துறையில் அனுபவம் வாய்ந்த முதியோரை நாடிச் செயற்படுவது கண்கூடாக இருக்க, ஞானத்தை மட்டும் ஒருவன் அதனை உணர்த்துபவர் ஒருவரும் இன்றித் தானே பெறுவது எவ்வாறு என்று கேட்கிறார்.

அருணந்தி சிவாச்சாரியாருக்கு மெய்கண்டார் குருநாதராக வாய்த்தது போல, உமாபதி சிவாச்சாரியாருக்கு மறைஞானசம்பந்தர் வாய்த்தார். அவரது பெயரிலே உள்ள மறையை (இரகசியம்).ப் போலவே அவரது வாழ்க்கை வரலாறும் விளக்கமாகக் கிடைக்கப் பெறவில்லை. மெய்கண்டார், அருணந்தி. உமாபதிசிவம் இவர்களைப் போல நூல்களும் எழுதியதாகத் தெரியவில்லை. இருந்தும் இந்த ஞான குருவை உமாபதி சிவாச்சாரியார் சென்னிமிசை வைத்துப் போற்றித் தமது சித்தாந்த அட்டகத்துள் தலை நூலாக்கிய சிவப்பிரகாசத்தில் குருவணக்கமாகக் கூறுமிடத்து

"பார்திகழ வளர்சாம வேதம் மல்கப்
பராசரமா முனிமரபு பயில ஞானச்
சார்புதர வந்தருளி எம்மையாண்ட
சைவசிகாமணி மருதைத் தலைவன் அந்தண்
கார் மருவு பொழில்புடை சூழ் மதில்மீதே மதியங்
கடவாமை நெடுங்கொடியின் கரந்தகையும் கடந்தைச்
சீர்நிலவு மறைஞான சம்பந்தன் எந்தை
திருவளரும் மலரடிகன் சென்னி வைப்பாம்"

என்று நிலந் தோயப் பணிந்தெழுவார்

போற்றிப் பஃறொடையில்

போற்றி திருத்தில்லை! போற்றி சிவபோகம்!
போற்றியவன் மெய்ஞ்ஞானப் புண்ணிய நூல் – போற்றி எங்கள்
வெம்பந்த வாழ்க்கைவிட வேறாய்வந் துள்நின்ற
சம்பந்த மாமுனிபொற் றாள்.

என்றும், நெஞ்சுவிடு தூதில் தனது நெஞ்சையே குரு நாதரிடத்துத் தூதாக விடுக்கின்றார்.

தராவலயத் துள்ளோர்கள் தந்தசங் கற்ப

**நிராகரணம் என்னால் நிகழ்த்தும்–பிரானை இனி**
**வெப்பந்தம் நீங்கத் தொழுமின் வியன்மருதச்**
**சம்பந்தன் வந்தருளும் தான்.**

சிவபெருமானே, மறைஞானசம்பந்தர் என நினைந்து நினைந்து கண்ணீரில் நனைந்து நனைந்து போற்றுகின்றார்.

இவ்வளவு சிறப்புக்களுக்கும் பெருமைகளுக்கும் உரிய அந்தக் குருநாதரான மறைஞான சம்பந்த சுவாமிகளை உமாபதியார் சந்தித்ததும் ஓர் அற்புதச் சூழ்நிலையிலேதான்.

மறைஞான சம்பந்தர் வெள்ளாற்றங்கரையில் உள்ள திருப்பெண்ணாகடத்தில் அந்தணர் மரபில் அவதாரம் செய்து அருணந்தி தேவ நாயனார் பால் சிவஞான உபதேசம் பெற்றவர். உமாபதி சிவாச்சாரியார் தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிர வருள் ஒருவர். ஞான ஆனந்தமா நடராசப் பெருமானின் திருமேனி தீண்டும் பேறு பெற்றவர். ஒரு நாள் அவர் தமக்குரிய விருதுகளுடன் கைவிளக்கேந்திய பணியாட்கள் முன்செல்லப் பல்லக்கில் திருக்காளஞ்சேரிக்குச் சென்றுகொண்டிருந்தார் அவர் போவதைத் தெருவோரம் நின்று பார்த்துக் கொண்டிருந்த மறைஞான சம்பந்தர் தன்னைச் சூழ உள்ளவர்களிடம் "பட்டகட்டையில் பகற்குருடு போகுது பார்" என்று கூறினார். இச் சொல்லைச் செவியேற்ற உமாபதி தேவர் மலபரிகமும் சத்திநிபாதமும் ஒருங்குற்ற உத்தமர் ஆகையினால் உடனே தமது சிவிகையினின்றும் இறங்கி, மறைஞான சம்பந்தரது திருவடியை எட்டுறுப்பும் ஐந்துறுப்பு நிலந்தோயப் பணியும் இருவேறு வணக்கமும் புரிந்தார்.

அதுபோழ்து மறைஞான சம்பந்தர் உண்டு கொண்டிருந்த கூழ் அவரது கரங்களின் வழியாகக் கீழே ஒழுகிற்று. அதனை எச்சிலென்று பாராமல் குருநாதனின் திருவருட் பிரசாதமாக ஏற்று உண்டார்.

உமாபதி சிவனாரது அதிதீவிர பக்குவத்தினை உணர்ந்த மறைஞான சம்பந்தர் இறைஞானத்தை உபதேசித்து குறைஞான வறுமையில்லாதவாறு நிறைஞானச் செல் வராக்கினார். மறைஞான சம்பந்தர் தில்யையில்வாழ்ந்து திருக்காளாஞ் சேரியில் சிவமுத்தி எய்தினார்.

# பயில்வோர் பயிற்சிக்கு—3

**மாதினி**

1. சுந்தரமூர்த்தி நாயனாரின் பிள்ளைத்திருநாமம் என்ன?
2. சுந்தரமூர்த்திநாயனாரை வளர்த்த அரசன் பெயர் என்ன?
3. திருவதிகையில் சுந்தரர் தங்கியிருந்த மடம் எது?
4. வன்மீகநாதர் எழுந்தருளியுள்ள தலம் எது?
5. சுந்தரர் எப்பதிகம் பாடி வலக்கண்பார்வை பெற்றார்?
6. சுந்தரர் திருக்கேதீஸ்வரத்தை எத்தலத்தில் இருந்து பாடினார்?
7. கழிறிற்றறிவார் என்பவர் யார்?
8. முதலையுண்ட பாலனை உயிர் பெற்றெழப்பாடி யபதிகம் எது?
9. சுந்தரரின் குரு பூசைத் தினம் எது?
10. சுந்தரருக்கு வழங்கும் வேறு பெயர்கள் இரண்டு தருக?
11. மாணிக்க வாசகருக்குப்பாண்டியன் சூட்டிய பட்டம் என்ன?
12. குதிரைகள் மதுரைக்கு வந்த தினம் எது?
13. இறைவன் யாருக்காக் கூலியாளாக வந்தான்?
14. மாணிக்கவாசகர் எத்தலத்தில் உபதேசம் பெற்றார்?
15. மாணிக்கவாசகர் நின்ற நெறி எது?
16. திருவாரூரில் பாடிய திருவாசகம் எது?
17. மாணிக்கவாசகர் முத்தியடைந்ததலம் எது?
18. மாணிக்கவாசகர் இறைவனை அருட்குரு வடிவில் கண்டுகளித்த தலங்கள் எவை?
19. இவரது குரு பூசைத் தினம் எது?
20. மாணிக்கவாசகர் அருளிய நூல்கள் எவை?

மாத மகத்துவம்

# விநாயக சதுர்த்தி விரதம்

செ. நவநீதகுமார்

நாம் எண்ணிய கருமங்கள் எளிதில் முற்றுற விநாயகப் பெருமானை வழிபாடு செய்தே கருமங்களைத் தொடங்குகிறோம். விநாயகரைவழிபட்டு மேற்கொள்ளும் காரியங்கள் இடையூறின்றி, விக்கினங்களின்றி நிறைவுறும். விக்கினங்களைத் தீர்ப்பதனால் விக்கினேஸ்வரன் என்ற பெயர் அமைந்துள்ளது.

விநாயகரை வழிபடும் முறை இலகுவானது. இவர் ஆற்றங்கரை, குளக்கரை, அரச மரத்தடி, தெருச்சந்திபோன்ற இடங்களில் எழுந்தருளி இருப்பார். சந்தனத்தால், அல்லது சாணத்தினால் பிள்ளையார் பிடித்து அறுகுசாத்தி வழிபடலாம். சிரசிலேமும்முறை குட்டித்தோப்புக்கரணம் போட்டு வழிபடுவது பெருமானுக்கு உவப்பானது. ஒரு முறை வலம் வந்து வணங்கினாலும் போதும். இவருக்கு மிகவும் உவப்பானது தேங்காய். விநாயகர் சந்நிதியில் சிதறு தேங்காய் அடித்து வணங்குவர். எமது பாவங்களைத் தேங்காயாகப் பாவனை செய்து பெருமான் முன் சிதற அடித்துத் தேங்காய் சிதறுவது போல எமது பாவங்களும் தீவினைகளும் சிதறி அழிவதையே இத்தத்துவம் விளக்குகின்றது.

விநாயகருக்குரிய விரதங்கள் மூன்றாகும். விநாயக சுக்கிரவாரம், விநாயகசஷ்டி,சதுர்த்தி என்பன அவை. வைகாசிமாதப் பூர்வ பக்க முதற் சுக்கிரவாரம் (வெள்ளிக் கிழமை) தொடக்கம் பிரதி வெள்ளிக் கிழமை தோறும் அனுஷ்டிப்பது விநாயக்சுக்கிர வாரவிரதமாகும்.

கார்த்திகை மாத அபரபக்கப் பிரதமை முதல் மார்கழிமாதப்பூர்வபக்கச் சஷ்டி ஈறாக இருபத்தொரு தினங்கள் அனுஷ்டிப்பது விநாயக சஷ்டி விரதமாகும்.

ஆவணி மாதப் பூர்வபக்கச் சதுர்த்தி முதல் மாதம் தோறும் வரும் சதுர்த்தியில் அனுஷ்டிக்கும் விதரம் சதுர்த்தி விரதமாகும். ஆவணிமாதத்தில் வரும் பூர்வபக்கச் சதுர்த்தி விநாயகசதுர்த்தி எனப்பெயர் பெறும். இந்நாள் விநாயகர் அவதார தினம் என்பர்.

இவ் விரதம் அனுஷ்டிப்பவர் அதிகாலை எழுந்து நீராடி நித்தியகருமானுஷ்டானங்களை முடித்து விநாயகர் வழிபாடு செய்தல் வேண்டும். வீட்டில்ஓர் இடத்தைச் சுத்தப்படுத்தி, மாவிலை, தோரணம், பூமாலை என்பவற்றால் அலங்கரித்து விநாயகர் திருவுருவை எழுந்தருளப்பண்ணி வழிபடல் வேண்டும். தங்கத்தால், வெள்ளியால் அல்லது மண்ணால் வசதிக்கு ஏற்றபடி விநாயகர் திருவுருவை அமைக்கலாம்.

ஆவாகனாதி சோடோபசார பூஜை செய்து, நிவேதனம், தீபாராதனை அர்ச்சனை தோத்திரபாராயணம் செய்து வழிபடுதல் முறையாகும். விநாயகருக்கு உவப்பான நிவேதனங்களாகப் பின்வருவன வற்றை அருணகிரிநாதர் குறிப்பிடுவார்.

"இக்கவரை நற்கனிகள் சர்க்கரைபருப் புடனெய்
எட்பெரி யவற்றுவரை இளநீர் வண்டெச்சில்
பயறப்பவகை பச்சரிசி பிட்டு வெளரிப்பழ
மிடிப்பல் வகை தனிமூல
மிக்கவடிசிற் கடலை"

கரும்பு, நாவற்பழம், விளாம்பழம் முதலிய பழவகை, வெல்லம், பருப்பு நெய், எள்ளுருண்டை, நெற்பொரி, அவல், துவரை, இளநீர், தேன், பயறு அப்பவகை, பச்சைஅரிசி (காப்பரிசி), பிட்டு, வெள்ளரிப்பழம், தினைமா, வள்ளிக்கிழங்கு, மோதகம், வெற்றிலை, பாக்கு, தேங்காய் முதலியவற்றைப் பெருமானுக்கு நிவேதனம் பண்ணவேண்டும். மாசிப்பச்சை, கரிசலாங்கண்ணி, வில்வம், அறுகு, இலந்தை, ஊமத்தை, மாவிலங்கை, நாயுருவி, சிறுவழுத்தலைவன்னி, நொச்சி,மந்தாரை, மருக்கொழுந்து, அரளி, கோங்கு, அரசு, வெள்ளெருக்கு, மருது, விஷ்னு கிரந்தி, மாதுளை, ஜாதிமல்லிகை ஆகிய இருபத்தொரு பத்திர புஷ்பங்களால் அர்ச்சிக்க வேண்டும். அன்று அறுகினால் அர்ச்சிப்பது விசேடமான தொன்றாகும். இரட்டையாக இருபத்தொரு அறுகம்புல்லால் அர்ச்சிப்பது சிறப்பானதாகும்.

சுலபன் என்றொரு அரசன் நீதிவழுவாது தன்நாட்டை ஆண்டு வந்தான். அவன் மனைவி சுபத்திரை. தினந்தோறும் யாசகர் பலர் அவனிடம் வந்து பொருள் பெற்றுச் சென்றனர்.

ஒருநாள் அரசன் சபையில் இருந்தவேளை மதுசூதனன் என்ற அந்தணனொருவன் அங்கு வந்தான். அவன் வறுமையால் வாடி மெலிந்திருந்தான். அவனது தோற்றத்தைக் கண்ட அரசன் நகைத்தான். அரசனின் சிரிப்பு அந்தணனுக்கு எரிச்சலை ஊட்டிற்று ஏழைகளைக் கண்டு இரங்கவேண்டிய நீ வறுமையால் வாடிய என்னைப் பார்த்து அறிவில்லாதவன் போல் நகைத்தாய். எனவே நீ அறிவில்லாத பிராணியான கழுதையாகித்துன்புறுவாய்" எனச்சபித்தான் மதுசூதனன்.

இதைக்கண்ணுற்ற அரசி வெகுண்டு "தவறு செய்பவர்களை மன்னித்தல் மனிதப்பண்பு. அப்படி இன்றிக் கோபங்கொண்டு சாபம் கொடுத்த நீ எருதாகப் பிறந்து உழலக்கடவாய்" என்றாள். இதனால் வெகுண்ட அந்தணன் உன் கணவன் தவறு செய்ய அதைப் பொருட்படுத்தாது எனக்குச் சாபம் கொடுத்தாய். நீ இழிகுலப் பெண்ணாய்ப் பிறந்து அலைவாயாக" என்றான்.

இவர்கள் சாபம் பலிக்கத் தொடங்கியது. அரசன் கழுதையாகப்பிறந்து ஒரு சலவைத் தொழிலாளியிடம் இருந்தான். அவன் பொதி சுமப்பதற்கு கழுதையைப் பயன்படுத்தினான். வேளா வேளைக்குப்போதிய உணவு போடுவதில்லை. இடையிடையே கழுதையை அடித்துத்துன்புறுத்துவான்.

மதுசூதனன் எருதாகி உழவனொருவனிடம் வேலை செய்தான். பகல் முழுவதும் உழுவதும், வண்டியிழுப்பதுமாக எருது நன்றாக வேலை செய்தது. இரவில் உழவன் போடும் புல்லை உண்டு அரைவயிறை நிரப்பும். வேலைப்பழுவாலும், போதிய உணவு இல்லாததாலும் வருந்தியது அவ்வெருது.

அரசி சேரிப்புறத்திற் பெண்ணாகப் பிறந்து பலதுன்பமு முழன்று கலங்கிக் காலம் கழித்துவந்தாள். பகலிலே புல் வெட்டி விற்று அவ்வருமானங்கொண்டு வாழ்கையை ஓட்டி வந்தாள்.

ஒருநாள் சேரிப்புறத்துப் பெண் புல் வெட்டு வதற்காக ஆற்றங்கரைக்கு வந்தாள். அங்கு கழுதை நின்றது. உழவன் புல்மேய்வதற்கென எருதை அங்கு கொண்டுவந்துவிட்டான். அவ்வேளை மழை பொழியத்தொடங்கியது. ஆற்றங்கரையில் விநாயகர் கோயில் இருந்தது. வெட்டிய புற்கட்டுடன் பெண் கோயில் மண்டபத்திற்கு வந்து ஒதுங்கிநின்றாள். எருதும், கழுதையும் அப்பெண் நின்ற மண்டபத்தில் வந்து மழைக்கென ஒதுங்கி நின்றன. அன்று விநாயக சதுர்த்தி. கோயிலில் அடியவர்கள் கூடி விநாயகருக்கு அபிஷேக ஆராதனை செய்து கொண்டிருந்தனர்.

பகல் உணவு உண்ணாததாற் பெண் சோர்ந்திருந்தாள். பசியால் வாடி இருந்த எருதும். கழுதையும் பெண்ணின் பக்கத்தில் இருந்த அறுகம் புல்லைக்கண்டு அதை உண்ணவெண்ணி வாயாற் பற்றி இழுத்தன. தனது அறுகம்புற்கட்டை இவை இழுப்பதைக்கண்ட பெண் எருதை அடித்தாள். எருது கழுதையை மோதியது. காற்றுப்பலமாக வீசவே எருதின் வாயிலிருந்தும், கழுதையின் வாயில் இருந்தும் புற்கட்டில் இருந்தும் அறுகம்புல் பறந்து சென்று விநாயகர் திருவுருவிற்பட்டது. இதைப்பார்த்த அடியவர்கள் அபச்சாரச் செயல் இதுவெனப் பெருமானுக்கு அபிஷேகம் செய்தனர். இம்மூன்றையும் மண்டபத்தை விட்டுச்செல்லுமாறு விரட்டினர். இதனால் இவை மூன்றும் கோயிலைச் சுற்றி அலைந்தன.

அவ்வேளை தேவகணங்கள் விமானத்தில் வந்து பெண்ணையும், கழுதையையும், எருதையையும் விண்ணுலகிற்கு வருமாறு அழைத்தனர். இந்த அதிசயத்தைக்கண்டு அங்கு நின்றவர்கள் "விண்ணுலகிற்குச் செல்வதற்குரிய தகுதிதான் இவற்றிற்கென்ன? எனவினாவினர். "விநாயக சதுர்த்தித்தினமான இன்று பகல் உண்ணாதிருந்து அறுகப்புல்லால் அர்ச்சித்தபலன் இதுவாகும்" என்றனர் தேவகணங்கள். அறிந்தோ அறியாதோ அறுகினால் விநாயகரைப்பூசிப்பது பேறுதரவல்லதொன்றாகும்.

அன்று பகல் ஒருவேளை உணவு உண்பது சிறந்தது. இயலாதவர்கள் இரவில் பால்பழம் அல்லது பலகாரம் உட்கொள்ளலாம். பூஜை வழிபாடு முடிந்த பின்னர் இயன்றளவு தான தருமம் செய்து மண்ணாற் செய்த விநாயகர் திருவுருவை ஆற்றில் விடுவது முறையாகும். இவ்விரதம் இருபத்தொருவருடம் அனுஷ்டிப்பது சிறந்தது.

ஒரு சமயம் தேவர்கள் முன்னிலையில் திருநடனம் புரிந்தார் விநாயகர். அவரின் தொந்தி, துதிக்கை, மோதகம் ஏந்தியகை என்பவற்றைக் கண்டு சந்திரன் சிரித்தான். விநாயகர் கோபங்கொண்டு "சுயபிரகாசமின்றிச் சூரியன்மூலம் பிரகாசமடையும் நீ அழகுடையவன் என்று எண்ணினாய். பெரியோர் சபையிலே அடக்கமின்றி நகைத்தாய். உன்னைப் பார்ப்பவர்கள் அலைந்து திரியக்கடவர்" எனச்சாபமிட்டார்.

சந்திரன் ஒளி மழுங்கிப் பூவுலகிற்கு அடியிற் சென்று மறைந்திருந்தான். இந்திரன் உபதேசப்படி சந்திரன் ஏகாட்சர மந்திரத்தைச் ஜெபித்து இருபத்தொருவருடம் விநாயகரை வழிபட்டான். விநாயகரும் மகிழ்ந்து சந்திரனுக்கு அனுக்கிரகம் புரிந்தார். "ஆவணி மாத பூர்வச் சதுர்த்தியில் உன்னைப்பார்ப்பவர்கள் துன்புறுவர். ஏனைய காலங்களில் நீ முன்போல இருக்கக்கடவை. அங்காரகசதுர்த்தி தோறும் நீ உதயமாகின்றபோது என்னைப் பூசித்து உன்னை யாவரும் துதிசெய்யக்கடவர்" என்றார் விநாயகர். சந்திரனின் ஒருகலையைத்தமது முடியிற் சூட்டிப்பால சந்திர விநாயகரானார்.

மாளவதேசத்தைச் சந்திராங்கதன் என்னும் அரசன் ஆண்டு வந்தான் அவன் மனைவி இந்துமதி. காட்டுவிலங்குகள் நாட்டினுள் வந்து மக்களைத் துன் புறுத்தவே மக்கள் மன்னனிடம் வந்து முறையிட்டனர்.

சந்திராங்கதன் வீரர்பலர் புடை சூழ வேட்டையின் பொருட்டுக்காடு நோக்கிச்சென்றான். கொடிய விலங்குகளைக் கொன்று குவித்தான் மன்னன். அவ்வேளை ஓர் அரக்கி அரசனைப் பிடிப்பதற்கென ஆர்ப்பரித்து வந்தாள். அரசன் அங்குள்ள குளம் ஒன்றினுட் குதித்தான். அக்குளத்தில் நாக மங்கையர் நீராடிக் கொண்டிருந்தனர். அவர்கள் அரசனைக்கண்டு மையல் கொண்டு அவனை நாக லோகத்திற்குக் கொண்டு சென்றனர். நாக கன்னியர் தம்மை மணந்து இன்புறுமாறு மன்னனை வேண்டினர். "நான்" நீதிமுறை தவறாதவன். திருமணமானவன் என் மனைவியைத்தவிர வேறு பெண்களைக் கனவிலும் கருதாதவன் என்றான் மன்னன். உபசாரம் பல செய்தும் நாக கன்னியரால் அரசன் மனத்தை மாற்றமுடியவில்லை.

மன்னனுடன் காட்டிற்குவந்தவீரர்கள் எங்கு தேடியும் மன்னனைக்கண்டிலர். இந்துமதியிடம் சென்று மன்னன் குளத்துள் வீழ்ந்து இறந்தான் என்றனர்வீரர். இந்துமதி கவலை கொண்டு நிலத்தில் உருண்டு புலம்பினாள். உறவினர் தேற்ற ஒருவாறு தேறி மாங்கல்யம் இழந்து விதவைக் கோலம் பூண்டிருந்தாள்.

ஒரு நாள் நாரத மகரிஷி மாளவ தேசத்திற்கு வந்தார். அவரை உபசரித்து, சந்திராங்கதனுக்கு நடந்த தென்ன? என வினாவினாள் இந்துமதி. முக்காலமும் அறியும் முனிவர் "சந்திராங்கதன் நாகலோகத்தில் இருக்கிறான்" என்று ஞானதிருஷ்டியால் அறிந்து கூறினார். "அவனை அடையவேண்டுமாயின் விநாயகர் சதுர்த்தி விரதத்தை அனுஷ்டி" என்றார் முனிவர். இந்துமதி முறையாக விநாயகர் சதுர்த்தி விரதம் அனுஷ்டித்தாள்.

நாக கன்னியர் தம் எண்ணம் நிறை வேறாதென எண்ணித் திரவியங்கள் பல கொடுத்து மன்னனைக் குளக்கரையிற் கொண்டு வந்து விட்டனர். மன்னன் நாடு நோக்கி வருவதைக் கண்ட அமைச்சர் முதலானோர் அவனை வரவேற்று நடந்தவற்றைக்கேட்டறிந்தனர். வேத சாத்திர விற்பன்னர் கூறிய பிரகாரம் பிராயச்சித்தம் செய்து மன்னன் இந்துமதியுடன் வாழ்ந்து வந்தான். இருவருமாக விநாயக சதுர்த்தி விரதம் அனுஷ்டித்து இறுதியில் வீடுபேறு பெற்றனர்.

இவ்விரதத்தை நோற்றுத் தமயந்தி தன்னை விட்டுப் பிரிந்த நளனை மீண்டும் அடைந்தாள்.

**சங்கடஹர சதுர்த்தி**

சங்கடஹர என்றால் உபத்திரவங்களைப் போக்குவது என்றுபொருள்படும். கடன், நோய், சிறைவாசம், மனக்கிலேசம் முதலிய துன்பங்களாற் பீடிக்கப்பட்டவர்கள் அவற்றை விடுத்து இன்பம் வேண்டி நோற்கும் விரதம் சங்கட ஹரசதுர்த்தி விரதமாகும். இவ்விரதம் ஆவணி மாத அபரபக்கச் (தேய்பிறை) சதுர்த்தியில், சந்திரோதய காலத்தில் அனுஷ்டிப்பதாகும். மாசிமாத அபரபக்கச் சதுர்த்தியிலும் மாதம் தோறும் வரும் அபரபக்கச் சதுர்த்தி சந்திரோதயத்திலும் இவ்விரதம் அனுஷ்டிக்கப்படும்.

சங்கடஹர சதுர்த்தி அன்று காலை எழுந்து நீராடி நித்தியகரும அனுஷ்டானங்களை முடித்து விநாயகரைப் பூசிக்க வேண்டும். சந்திர உதயம் வரை எந்த உணவையும் உட்கொள்ளேன், உன்னையே நினைத்திருப்பேன், எனது மனத்துயரை நீக்கி அருள் வாய் என்று சங்கற்பம் செய்து பூஜையை ஆரம்பிக்கவேண்டும். அவல், மோதகம், எள்கலந்த கொழுக்கட்டை போன்ற இனிப்புப்பண்டங்களை நிவேதித்துஅறுகினால் அர்ச்சிப்பது உகந்தது. தரித்திரங்கள் நீங்கவேண்டின்குடை, (செருப்பு) பாதரக்ஷை, பசு முதலியனவற்றை அந்தணருக்குத்தானம் கொடுத்தலும், பிராமண போஜனம் செய்வித்தலும் வேண்டும்.

சந்திர உதயவேளையிலே விநாயரைப் பூசித்த பின் ரோகிணியுடன் சந்திரனையும் பூசித்தல் முறையாகும். அதன்மேல் உப்புச் சேர்க்காத உணவு உட்கொள்வது சிறந்தது.

தன் ஆட்சியில் நாட்டு மக்கள் சுபிட்சமடைய வேண்டி அரிச்சந்திரன் இவ்விரதத்தை அனுஷ்டித்தான். சீதாபிராட்டியாரைத் தேடச்சென்ற அனுமன் இவ்விரதத்தை நோற்று வெற்றி பெற்றான். வனவாசத்திற் துன்புற்ற பாண்டவர்களுக்குக் கிருஷ்ணன் இவ்விரதமகிமையை உபதேசித்தான். பாண்டவர்களும் இவ்விரதத்தை அனுஷ்டித்து, வெற்றிபெற்று நாட்டை ஆண்டனர்.

சங்கடஹர சதுர்த்தி விரதம் அனுஷ்டிப்போர் தம்மனக்குறை தீர்ந்து தாம் நினைத்தவற்றைப் பெறுவர்.

இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது நமக்கு
விளங்காமையால் எக்காலத்திலுங் கடவுளை வழிபடல் வேண்டும்.

நாவலர் இரண்டாம் பாலபாடம்.

# ஆவணி ஞாயிறு

சூரியபகவான் சிங்கராசியிற் சஞ்சரிக்கும் காலம் ஆவணி மாதம். சூரியனின் ஆட்சிக்கு உட்பட்ட இராசி சிங்கம். ஆதலால் அம் மாதத்தில் வரும் ஞாயிறு நாட்களில் சூரிய வழிபாடு சிறப்புப் பெறுகின்றது.

சூரியன் மூலம் வெப்பமும் ஒளியும் பூமிக்குக் கிடைக்கின்றது. மழை பொழிவதும் சூரியனால்; ஜீவராசிகளும், தாவரங்களும் வாழ்வதற்கு இன்றியமையாதவன் சூரியன். எனவே சூரியனைப் பிரத்தியட்ச தெய்வமாக மக்கள் வணங்குகின்றார்கள். சூரியவழிபாடு மிகப்பழங் காலந் தொட்டு நிலவிவருகின்றது.

சங்ககாலத்திற் சூரியனைப் போற்றியுள்ளனர். "உலகம் உவப்ப வலனேர்புதிரிதரு பலர் புகழ் ஞாயிறு" என்கிறது திருமுருகாற்றுப்படை. சிலப்பதிகாரத்தில் "ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்" என்று கூறப்பட்டுள்ளது.

சிவபெருமானின் வலக்கண்ணாக அமைந்துள்ளான் சூரியன். இறைவனின் அட்டமூர்த்தங்களுள் சூரியனும் ஒருவன். இவை திருமுறைகளில் கூறப்பட்டுள்ளன. "அருக்கன் பாதம் வணங்குவாரந்தியில் அருக்னாவது அரனுருவல்லனோ" என்பர் அப்பரடிகள். சைவ அனுட்டானத்தில் சூரிய நமஸ்காரமும் ஓர் அங்கமாகும். ஆலயங்களிலே நிகழும் பகற்பூசையில் முதலில் சூரியபூசை இடம்பெறும்.

நவக்கிரகங்களுள் நடுநாயகமாக விளங்குபவன் சூரியன். உடல்நலம், கல்வி, தொழில்வாய்ப்பு போன்றவையைக் கொடுக்கவல்லவன் சூரியன் என்று சோதிடநூல்கள் கூறும். சூரியன் பிதிர்காரகன். கண்பார்வை பிராகாசமாக இருப்பதற்கும் சூரியன் பலம் தேவைப்படுகிறது. இதனாற்போலும் "கண்கெட்ட பிறகா சூரியநமஸ்காரம்" என்ற முதுமொழி வழக்கில் உள்ளது.

தினமும் காலையிலே நீராடி வழிபாடு முடித்துச் செந்தாமரை முதலிய சிவப்பு நிறமலர்கள் தூவிச்சிவசூரிய மூர்த்தியை வழிபட்டு, இருமுறை ஆன்மப்பிரதட்சணம் செய்துவந்தால் உடற்பிணிதீரும். இது முடியாதவர்கள் ஆவணி மாதத்தில் வரும் ஞாயிறுதோறும் வழிபாடு செய்யலாம்.

ஆவணி ஞாயிறன்று முற்றத்திலே பசுஞ்சாணத்தால் மெழுகி மாக்கோலம் போட்டு அடுப்புவைத்துப் பொங்கல் பொங்கிப் படைத்து அதனுடன் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், இளநீர் முதலியவற்றை நிவேதித்துச் செந்நிற மலர் தூவித் தூப, தீபம் காட்டித் தோத்திரம் பண்ணிச்சூரியனை வழிபடும் முறை தொன்று தொட்டு நிகழ்ந்துவருகிறது.

"சூரியமண்டலத்தைத் தரிசித்து, வெண்டாமரைப் பூவின்மேலே, செவ்வொளியையுடைய வட்ட மண்டலத்தின் நடுவே உள்ளவராய், மாதுளம்பூ நிறத்தினராய் ஒருதிருமுகமும் இரண்டு திருக்கண்களும், இரண்டுதிருப்புயத்திலும் பொருந்திய அலர்ந்த வெண்டாமரைப்பூநாளம் இரண்டு பிடித்த திருக்கையும் உடயவராய்ச் சிவந்த வஸ்திரம் தரித்தவராய் உள்ள சூரியமூர்த்தியைத் தியானித்துச் சிவசூரியாயநம என்று செந்தாமரைப்பூ முதலிய செம் பூக்களைத்தூவித் தோத்திரம் பண்ணி இரண்டு தரம் ஆன்மப் பிரதட்ஷணம் செய்து, வைகர்த்தனாய நம முதலான பன்னிரண்டு திருநாமங்களைச் சொல்லிப் பன்னிரண்டு நமஸ்காரஞ் செய்து எழுந்து கும்பிட்டு விரும்பிய வரங்களை வேண்டிக் கொள்க". இவ்வாறு நித்திய கருமவியலில் ஆறுமுக நாவலர் குறிப்பிட்டுள்ளார்.

விளங்கு தண்டி முதலோராற் சேவிக்கப்படுவோன்
விமலன் முதனாற் சிங்க பதாசனத்தின் மேலோன்
களங்கமிலாத் தீத்தை முத்சத்தி கணசகிதன்
கருதருண மணியொளியன் கடோற்கான்ம மூர்த்தி
துளங்கலி றன்னங்கந் தன்னங்க மேனுங் கிரகந்
தொகுமூடுவாதிய சூழச் சுவேதகஞ் சத்திவர்ந்தோன்
வளங்கொள் சுவேதாம்புசத் தோட்கரனிரு நல்விழியோன்
வருசிவ சூரியன் காக்க மகிழ்ந் தடியேங்களையே.

தேவரும் முனிவரும் போற்றும் சிவசூரிய மூர்த்தியை வழிபட்டால் உடல் நலம் பெற்றுச் சகல சம்பத்துக்களும் பெறலாம்.

திருக்கோயில்கள்தோறும் சனங்களுக்குச் சமயநெறியைப் போதிப்பித்தலும் மிக மேலான புண்ணியங்களாம்.

நாவலர் – ஒரு விக்கியாபனம்.

# ரிஷிபஞ்சமி

பாத்திரபத மாத பஞ்சமியில் இவ்விரதம் அனுஷ்டிக்கப்படும். இது பெண்களுக்கு உரியவிரதம்.

பெண்கள் ருதுவான காலத்தில் (மாதவிலக்கு) ஒதுங்கியிருக்கவேண்டும் என்பது விதி. இக்காலங்களில் தெரிந்தோ தெரியாமலோ ஏற்படும் அனாசாரம், அசுத்தம் என்பவற்றால் உண்டாகும் தோஷம் பாவம் என்பன நீங்கிப்புனிதர்கள் ஆவதற்கும், சகலசேம முண்டாகவும் இவ்விரதம் அனுஷ்டிக்கப்படும்.

இவ்விரதத்திற்கு முன்னதாக யமுநா பூஜை செய்தல் வேண்டும். காலையில் செய்ய வேண்டிய கருமங்களை நிறை வேற்றி மத்தியானத்திலே நாயுருவி வேராற் பல்துலக்கிப்பின் நீராட வேண்டும். சிவப்பு நிற ஆடை தரித்துப் பஞ்சகவ்வியம் உட்கொண்டுபின்னர் பூஜையை ஆரம்பிக்க வேண்டும்.

அரிசியிலே அஷ்டதளபத்மம் எழுதி அதன் மீது (கச்சியபர், அத்திரி, பரத்வாஜர், விச்வாமித்திரர், கௌதமர், ஜமதக்னி, வசிட்டர், அகத்தியர்) சப்தரிஷிகளிற்கும், அருந்ததிக்கும் கும்பம் வைத்து முறைப்படி பூஜை செய்யவேண்டும் ஆசாரமுள்ள தம்பதியரை அழைத்து அவர்களை வணங்கி வஸ்திரம், தட்சணை முதலியன கொடுத்து உபசரித்து ஆலய வழிபாடு செய்து ஒருபொழுது உணவு உட்கொள்வது முறைமையாகும்.

விதற்ப நாட்டிலே உதங்கர் என்னும் முனிவர் தன் மனைவி சுசீலை என்பாளுடன் வாழ்ந்து வந்தார். இவர்களுக்கு ஒருமகனும் ஒரு மகளும் உண்டு. புதல்விக்கு உரிய பருவத்தில் திருமணம் முடித்துக் கொடுத்தனர். சிலகாலத்தில் அவள் கணவனை இழந்து தந்தையாரிடம் வந்து சேர்ந்தாள். முனிவரும் கவலையுற்றுக் கங்கைக்கரையில் ஆச்சிரமம் அமைத்துச் சீடர்களுக்கு வேதம் கற்பித்துவந்தார். முனிவரது மகள் அவருக்குப்பணிவிடை செய்து வந்தாள்.

ஒரு நாள் அவள் தூங்கும் போது அவள் உடலில் ஒரு மாற்றம் கண்டு சீடர்கள் அவளின் தாய்க்குத்தெரியப்படுத்தினர். தாயும் முனிவரிடம் கூறினாள். முனிவர் அதற்கான காரணம் யாதென எண்ணினார். முற்பிறவியிலே இவள் பிராமணகுலத்திலே பிறந்தாள். மாதவிடாய்க் காலத்தில் அசுத்தம் என்று எண்ணாது பாத்திரம் பண்டங்களைத்தொட்டாள். அன்றியும் இவளது தோழியர் நோற்ற ரிஷி பஞ்சமி விரதத்தையும் பரிகசித்தாள். அதனால் இவ்விடர் வந்தது என ஞானதிருஷ்டியால் முனிவர் அறிந்து கூறினார்.

இந்தப்பாவத்தில் இருந்து விடுபட வேண்டுமாயின் ரிஷி பஞ்சமி விரதத்தை இவள் மேற் கொள்ள வேண்டும் என்றும் அவ் விரதம் அனுஷ்டிக்க வேண்டிய முறையையும் முனிவர் உபதேசித்தார். அவளும் அவ்வாறு நோற்று விரதமகிமையால் நற்பேறு பெற்றாள்.சுமித்திரன் என்பானின் மனைவி ருது பீடையால் ஏற்பட்ட தோஷத்தை இவ்விரதமனுட்டித்து நீக்கினாள்.

**அநந்த விரதம்**

பாத்திரபத ( ஆவணி அல்லது புரட்டாதி) மாதம் சுக்லபட்ச சதுர்த்தசி அன்று இவ்விரதம் அனுஷ்டிப்பது.

காலையிலே எழுந்து நீராடி நித்திய கருமானுட்டானம் முடித்து யமுனைப்பூஜையை முதலில் முடித்துப்பின்னர் ஒரு நூலில் பதினான்கு முடிச்சிட்டு அதைப்பூசித்துப்பின் அநந்தபூஜை விஷ்ணு அஷ்டோத்தரத்தால் பூசித்து, நோன்பு நூலை வலக்கரத்தில் கட்டி விரதம் இருந்து பிராமண போஜனம் தானம், தட்சணை வழங்கிப் பாரணைபண்ணுதல், முறையாகும்.

இவ்விரதம் பதினான்கு ஆண்டுகள் நோற்று உத்தியாபனஞ் செய்தல் வேண்டும். கௌண்டில்யர், பாண்டவர் முதலியோர் இவ்விரதத்தை அனுஷ்டித்துப் பேறு பெற்றனர்.

தமிழ் கற்கப்புகுஞ் சைவசமயிகள் முன்னர்ப் பாலபாடங்களைப் படித்துக் கொண்டு இலக்கணச் சுருக்கத்தைக் கற்றறிந்து இயன்றளவு விழையில்லாமல் எழுதவும் பேசவும் பழகுக.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

# திருவாசகம் – திருவுள்ளக்கிடை

பண்டிதர் சி. அப்புத்துரை

திருவாசகம் ஐம்பத்தொரு பகுதிகளை உடையது. இந்த ஐம்பத்தொரு பகுதிகளும் ஐம்பத்தொரு பதிகங்கள் என்று பேசப்படுகின்றன. அவை சிவபுராணம், கீர்த்தித்திருவகவல், என்று பெயர் பெறுகின்றன. இவ்வண்ணம் பெயர் பெறும் பதிகத்துள்ள திருப்பாடல்கள் பொதிந்துள்ள கருத்துக்களைத் தொகுத்துச் சொல்வது போன்றதொரு தொடர் ஒவ்வொரு பதிகத்துங் காணப்படுகின்றது. இந்த வகையிற் சிவபுராணம் என்பது, "சிவனது அநாதி முறைமையான பழமை", என்று காணப்படுகின்றது. இப்படியே ஐம்பத்தொரு பதிகங்களுக்கும் எழுதப்பட்டுள்ளது. இதனை யார் எழுதினாரென்றோ, எப்போது எழுதினாரென்றோ, எந்த வித தகவலும் கிடைக்கவில்லை. பதிகவிளக்க மாயமைந்த இந்தக் குறிப்பு, பழைய ஏடுகள் பல வற்றிலுங் காணப்படுவதாக. ஏடுகளை ஆராய்ந்தோர் குறிப்பபிட்டுள்ளனர். இந்தக் குறிப்புக்களே திருவாசகத் திருவுள்ளக்கிடை என்று குறிப்பிடப்படுகின்றன. இத்திருவுள்ளக்கிடையை விளக்குவதாய் அமைந்த குறிப்பும் சில ஏடுகளிற் காணப்படுகின்றன. "சிவனது அநாதி முறைமையான பழமை", என்னுந்திரு வுள்ளக்கிடை "சிவனது அருவநிலை கூறல்" என்னும் விளக்கத்துடன் பல அச்சுப் பிரதிகளிற் காணப்படுகின்றது.

இவை நீங்கலாக, அகத்தியர் திருவாசகத் திருவுள்ளக்கிடை என்பதொன்றுண்டு என்று பலர் பேச்சிலிருந்து பெற்ற செய்திகொண்டு, பல பழைய ஏடுகளை ஆய்வு செய்த அனவரதவிநாயகம்பிள்ளை அவர்கள் அகத்தியர் பெயரில் உள்ள திருவுள்ளக்கிடையைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்துப் பதிப்பொன்றில் வெளியிடச் செய்தார்கள். அந்தத் திருவுள்ளக்கிடை ஆசிரியப் பாவானியன்றது.

**அகத்தியர் திருவாசகத் திருவுள்ளக்கிடை.**

**நிலைமண்டில ஆசிரியப்பா.**

திருவார் பெருந்திறைச் சிவோன் மத்தன்
அருளிய திருவா சகசிவ புராணம்
அநாதி யுடனாம் நின்மல சிவனுடை
யநாதி முறைமை யான பழமை
மூர்த்த மான கீர்த்தியரு ளகவல்
வருசிவ னுடைய அருளின் முறைமை
திருவண்டப் பகுதி சிவனுடைத் தூல
விரிவும் சூக்கும மென்மையும் வியந்தது.
மாற்றரு குருவைப் போற்றித் திருவகவல்
மிகப்பெரிய தான சகத்துற் பத்தி
மிகையறு பொருட்டிருச் சதகம் பத்து
வகையா ரட்சித்த முறைமை, அவற்றுள்
மன்னு தேகாதி வருபிர பஞ்சம்
கண்டு மெய்யெனக் கருதிமெய் யுணர்தல்,
அறிவுக் கறிவாம் அருட்குரு தரிசனம்
பொறியொடு கூடா தறிவுற வுறுத்தல்,
தன்செய லறவே தான்சுட் டறுத்தல்,
ஆன்ம சுத்தி அனுபவத் தழுந்தல்,
கண்ணுத லிடைத்தனைக் கைமாறு கொடுத்தல்,
அனுபவ சுத்தி அதுமே விடலாம்,
பாருள் நிமலன் பரிந்தருள் வெற்றி
காருண்ய மாமெனக் கண்டறி விரங்கல்
சத்துஞ் சித்துந் தானென் றறிந்து
அத்துவித மானதோ ரானந்தத் தழுந்தல்,
மோனந்த மான முதல்தனை யுணர்தல்
ஆனந்த பரவசம் ஆமென உரைப்பர்
தானந்த மான சாட்குண்ணிய மீதே
ஆனந்தா தீதம் ஆமென லாமே.
நீத்தோர்க் குணர்த்தும் நீத்தல் விண்ணப்பம்
ஆத்த மாம்பிர பஞ்சவை ராக்கியம்.
திருவெம் பாவை தெசசத் திகளை
மருவி வியந்து வாய்மொழி பகர்ந்தது.
தேனுந்து செஞ்சொல் திருவம் மானன
ஆனந்த யோகக் களிப்பது வாகும்
மோனந்த மாக மொழிதிருச் சுண்ணம்.
ஆனந்த மனோலய மாமென மதிப்பர்.
திருக்கோத் தூம்பி சிவனோடைக்கியம்
திருத்தெள்ளேணம் சிவனுடன் செல்லல்.
அவமறு சாழல் சிவகா ருண்ணியம்.
பூவல்லி சடமாம் மாயா விடயம்.
ஊன மொழிக்கும் உயர்திரு வுந்தியார்
ஞான வெற்றி யெனநவின் றனரே.
திருத்தோ ணோக்கம் பிரபஞ்ச சுத்தி.
திருப்பொன் னூசல் திருவருட் சுத்தி.
அருட்டிரு அன்னைப் பத்தான்ம சம்பூரணம்
இயற்றரு குயிற்பத் தான்ம விரக்கம்.
செடியுட லறுக்கும் திருத்த சாங்கம்
அடிமை கொண்ட முறைமைய தாகும்.
திருப்பள்ளி யெழுச்சி திரோதான சுத்தி.
கோயின் மூத்த பதிகமற் றதுவே.
ஆதி யநாதிசற் காரிய மாகும்.
கோயிற் றிருப்பதி கங்கூ றிடுங்கால்
ஆச றுக்கும் அனுபோக இலக்கணம்
பளகறு செத்திலாப் பத்துச் சிவானந்தம்
அளவறுக் கவொண்ணா மைய தாகும்.
அத்து விதந்திகழ் அடைக்கலப் பத்து
வந்து நிர்ணயம் வகுத்துரைத் ததுவே.
தீர்க்கரும் ஆசைப்பத் தான்ம இலக்கணம்.
உணர்ச்சி தரும்மெய்ப் புணர்ச்சிப் பத்து.
முத்தி யருளும் அத்துவித இலக்கணம்.
வாழா வாழ்வருள் வாழாப் பத்து.

தத்துவ ஞான முத்தி உபாயம்.
பெருகருட் பத்து பெருமாயா சுத்தி.
அதிசயப் பத்து முத்தி யியல்பு.
காட்சிய தாகுந் திருக்கழுக் குன்றம்.
மாட்சிமை தருசற் குருதரி சனமே.
சுட்டறு சுட்டாற் கண்ட பத்து.
மட்டறு நிருத்த தரிசன மென்பர்.
பேதமில் பிரார்த்தனைப் பத்தது பேசில்
ஏதமில் இடைவிடா முத்திப் பேறே.
நிராமயம் குழைத்தபத் தான்ம நிவேதனம்
செயலறு செயலாம் உயிருண்ணிப் பத்து
செயிரறு சிவானந்த மேலீ டாகும்.
அருளுரு நச்சார்க் கச்சப் பத்துத்
தெருள்தரு சிவானந் தத்தின் முறுகுதல்.
திருப்பாண்டி விருத்தம் சிவானந்த விளைவு
வருபா சமதறு திருவே சறுபத்து
எட்டனை நீங்காச் சுட்டறி வொழிதல்.
நடித்த பாதம் பிடித்த பத்து
சித்த மலமறும் முத்திக் கலப்பாம்.
சாக்கிரா தீதத் தனித்திருப் புலம்பல்
நீக்க மிலாத சிவானந்த மடிநிலை
பராவரை மயமாம் திருக்குலாப் பத்து
பரானு பவம திடைய றாமை.
கற்பனை கழலும் அற்புதப் பத்து
அணிய தீதத் தனுபவ மாற்றாமை.
மன்னு திருவடிச் சென்னிப் பத்துத்
தன்னிக ரான தனிச்சிவ விளைவு
செலமல மறுக்குந் திருவார்த்தைப் பத்து
இலகும் அருளறி விக்க வறிதல்.
அழியா வுயிர்நிவே தனனெண் ணப்பத்து
ஒழியா இன்பத் துவகை யுரைத்தது.
யானென தறுமுரை யாத்திரைப் பத்து
ஊனமில் அனுபவம் உரைத்த முறைமை
சின்மய மான திருப்படை யெழுச்சி
பின்னம தான பிரபஞ்சப் போரே.
இணையிலா வின்பத் திருவெண் பாப்பத்து
அணவாச் சிவத்தனைக் தோரருட் டன்மை.
பண்டாய நான்மறைத் தொண்டம் வெண்பா
அம்மை முத்தி யனுபவத் துக்குக்
கைமா றருமை சும்மா வியந்தது.
கருப்படை மாறுந் திருப்படை யாட்சி
பரசீவ வுபாதி பாவக மொழிதல்
மின்னே ரனைய விரிபா மாலை
மன்னா நின்செயல் வழக்கழி வென்றது
நிச்சய முணர்த்து மச்சோப் பத்து
அனுபவம் வந்த வழியறி யாமை
ஆணிப்பொன் னார்மிளிர் அணிமதில் தில்லையுள்
மாணிக்க வாசகன் மாசறு சொற்படி
அழகிய திருச்சிற் றம்பல முடையார்
எழுதிய திருவா சகத்தனு பூதியை
மிகத்திரு ஞான விநோத குகருடி
அகத்துணர் ஞான அகத்தியன் தொகுத்தனன்
செகத்தறி வுடையோர் தெளிதரற் பொருட்டே.

என்னும் இப்பாடலின் இறுதிப் பகுதி கொண்டு இதற்கு இடப்பட்ட பெயர் **திருவாசகத்தனுபூதி** என்று தெரிகின்றது.

"சென்ற நூற்றாண்டில் திருவாசகத்துக்கு அனுபூதியுரை எழுதிய காழித் தாண்டவராயர் இவ்வகத்தியர் திருவுள்ளக்கிடையை எடுத்து ஒவ்வொரு பதிகத்தின் தலைப்பிலும் அமைத்து அகத்தியர் அனுபவச் சூத்திரம் என்று பெயர் கொடுத்திருக்கிறார். பாடபேதங்கள் சில இருப்பினும், இதுவும் அகத்தியர் திருவுள்ளக்கிடையும் (திருவாசகத்தனுபூதி)ஒன்றே.இதுவே பதிகத்தலைப் பாக இப்போதுள்ள அச்சுப் பதிப்புக்களிற் காணப்படும் கருத்தும்." என்று திரு.மு. அருணாசலம் அவர்கள் தாமெழுதிய திருவாசகக் குறிப்புக்கள் என்ற நூலிற் குறிப்பிட்டுள்ளார்கள்.

## திருவுள்ளக்கிடை சம்பந்தமாகக் கிடைத்துள்ள வேறுபாடுகள்

| திருவாசகத் திருப்பதிகங்கள் | திருவுள்ளக்கிடையும் விளக்கமும் | வேறுபாடுகள் |
|---|---|---|
| 1. சிவபுராணம் | சிவனது அநாதிமுறைமையான பழமை<br>சிவனது அருவநிலைகூறல் | சிவனது உயிர் அருள் நிலைமை |
| 2. கீர்த்தித்திருவகவல் | சிவனது திருவருட் புகழ்ச்சிமுறைமை | சிவனுடைய அருளின் முறைமை |
| 3. திருவண்டப் பகுதி | சிவனது நூல சூக்கமத்தை வியந்தது | சிவனுடைய தூல சூக்குமத்தை விகற்பித்தது |
| 4. போற்றித் திருவகவல் | சகத்தினுற்பத்தி<br>பிரபஞ்சத்தைத் தோற்றுவித்தல் | மிகப் பெரிதான சகத்துற்பத்தி<br>ஞானஞ் சகத்துற்பத்தி |
| 5. திருச்சதகம் | பத்தி வைராக்கிய விசித்திரம்<br>பத்து வகையாக இரட்சித்த முறைமை<br>1. மெய்யுணர்தல் – தேகாதி பிரபஞ்சங் களைக் கண்டுநீங்கல்<br>2. அறிவுறுத்தல் – பொறியோடே கூட்டுதல், அருள்தரிசனம், குருதரிசனம் | |

| | | |
|---|---|---|
| | 3. சுட்டறுத்தல் – தன் செயலறுதல்<br>4. ஆத்தும சுத்தி– அனுபவத்தழுந்தல்<br>5. கைமாறுகொடுத்தல் – தன்னைச் சிவனிடத்திலே கொடுத்தல்<br>6. அனுபோகசுத்தி – சுகமேலீடு<br>7. காருணியத்திரங்கல் – சிவனுடைய வெற்றிப்பாட்டிரங்கல்<br>8. ஆனந்தத்தழுந்தல் – பேரின்பத்தில் நிற்றல்<br>9. ஆனந்த பரவசம் – பேரின்ப அனுபவத்தில் தன்னை மறுத்தல்<br>10. ஆனந்தாதீதம் – பேரின்ப மேலீடு | ஆனந்தத்தழுந்தல்<br>ஆனந்தபரவசமாதல்<br>ஆனந்தாதீதமாதல்<br>சுட்டறிவொழித்தல்<br>கைமாறு கொடுத்தல்<br>அனுபவசுத்தி |
| 6. நீத்தல் விண்ணப்பம் | பிரபஞ்ச வைராகியம் | தெசசக்திகளை விகற்பித்தது, தெச சத்திகளாவன அம்பிகை, ஞானாம் பிகை, கௌரி, கங்கை, உமை, பராசக்தி ஆதிசக்தி, இச்சா சக்தி, ஞானா சக்தி, கிரியாசக்தி |
| 7. திருவெம்பாவை | சக்தியை வியந்தது. சக்திகளாவார், அம்பிகை, கணாம்பிகை. கௌரி, கங்கை. உமை, பராசக்தி, ஆதிசக்தி ஞானசக்தி, கிரியாசக்தி | |
| 8. திருவம்மானை | ஆனந்தக் களிப்பு என்பது சுகமேலீடு | ஆனந்தக் கனிவு |
| 9. திருப்பொற்சுண்ணம் | ஆனந்த மனோலயம். என்பது தானன்றி நிற்றல் | திருச்சுண்ணம் என்பது தன்னறி நிற்றல் |
| 10. திருக்கோத்தும்மி | சிவனோடைக்கியம் என்பது சிவனுடன் இடையறாது நிற்றல் | |
| 11. திருத்தெள்ளேணம் | சிவனோடடைவு என்பது சிவனுடனே சென்று கூடுதல் | சிவனுடைச் செலவு |
| 12. திருச்சாழல் | சிவனுடைய காருண்யம் என்பது சிவனுடைய அருட்சக்தி விளையாட்டு | |
| 13. திருப்பூவல்லி | மாயா விசய நீக்குதல் என்பது மாயை யினுடைய பலத்தை மறுத்தல் | மாயா விஷய மறுத்தல் |
| 14. திருவுந்தியார் | ஞான வெற்றி அருட்சத்தியின் சாமர்த்தியம் | ஞான வெற்றிப்பாடு |
| 15. திருத்தோணோக்கம் | பிரபஞ்ச சுத்தி என்பது ஆன்மாக்களைச் சுத்திகரித்தல் | |
| 16. திருப்பொன்னூசல் | அருட்சுத்தி என்பது அருளோடு கூடுதல் | அருள் கூட்டம் என்பது அருளோடே கூடினது |
| 17. அன்னைப்பத்து | ஆத்துமபூரணம் என்பது ஆன்மா சிவனுடனே நிலைத்தல் | ஆத்தும சம்பூரணம் |
| 18. குயிற்பத்து | ஆத்தும விரக்கம் என்பது சிவனைக் கண்டிரங்குதல் | ஆத்தும விகாரம் என்பது சிவனைக் கண்டிரங்குகிறது |
| 19. திருத்தசாங்கம் | அடிமைகொண்ட முறைமை. என்பது பத்தடையாளம் | பத்து வகையால் அடிமை கொண்டது |
| 20. திருப்பள்ளியெழுச்சி | திரோதானசுத்தி என்பது ஏகமாகிய திரோதாயி மறைப்பான மலம் நீக்குதல் | |
| 21. கோயில் மூத்த திருப்பதிகம் | அநாதியாகிய சற்காரியம் | சிவனத்தத்தில் திகைப்பு என்பது சிவானந்தம் அளவறுக் கொண்ணாமை. |
| 22. கோயிற்திருப்பதிகம் | அனுபோக இலக்கணம் என்பது சிவா னுபூதிக்கடையாளம் | |
| 23. செத்திலாப்பத்து | சிவானந்தமளவறுக்கொணாமை. என்பது சிவானந்த மணுகிச் செயிக்கப்படாமை | சிவானந் மலைவு |
| 24. அடைக்கலப்பத்து | பக்குவ நிண்ணயம் என்பது வித்தும் அங்குரமும் போல என்றல் | வஸ்து நிண்ணயம் |

| | | |
|---|---|---|
| 25. ஆசைப்பத்து | ஆத்துமவிலக்கணம் என்பது ஆன்ம பேதத்தையறிதல் | ஆத்தும ரூபத்தையறிதல் |
| 26. அதிசயப்பத்து | முத்தியிலக்கணம் என்பது மோட் சத்தினடையாளம் | |
| 27.புணர்ச்சிப்பத்து | அத்துவிதவிலக்கணம் என்பது ஒன்று மல்ல இரண்டுமல்ல என்றல். | அத்து விதானந்த இலக்கணம் |
| 28.வாழாப்பத்து | முத்தியுபாயம் என்பது பிரபஞ்சத்தை விட்டுப் பரபோகத்தைக் கூடுதற்குபாயம் | மோட்ச உபாயம், மோட்ச லட்சணம் |
| 29.அருட்பத்து | மகாமாயா சுத்தி என்பது மாயையைச் சுத்தி பண்ணுதல் | |
| 30. திருக்கழுக்குன்றப்பதிகம் | குருதரிசனம் என்பது பசுத்துவங் கெட்டவிடம் | சற்குரு தெரிசனம் |
| 31. கண்டபத்து | நிருத்த தரிசனம் | பரமானந்த நிருத்த தரிசனம் |
| 32.பிரார்த்தனைப்பத்து | சதாமுத்தி என்பது ஆன்மாக்களுக்கு முத்தி நிச்சயம் பண்ணுதல் | செக முத்தி |
| 33.குழைத்தபத்து | ஆத்தும நிவேதனம் என்பது நேயத்தோடே ஒன்றினது. | குழைத்தல் |
| 34.உயிருண்ணிப்பத்து | சிவானந்த மேலிடுதல் என்பது நேய மேலிடுதல் | |
| 35.அச்சப்பத்து | ஆனந்தமுறுவர் என்பது நேயத்திலே ஒன்றுபட்டுச் சிக்கென அழுத்தினது | ஆனந்தமுறுதல் |
| 36.திருப்பாண்டிப்பதிகம் | சிவானந்தவிளைவு என்பது சுகமேலீடு | திருப்பாண்டி விருத்தம் சிவானந்த விரைவு |
| 37.பிடித்த பத்து | முத்திக் கலப்புரைத்தல் என்பது மற்றுள்ள ஆன்மாக்களுக்கு முத்தியின் சுகத்தைச் சொல்லியது | |
| 38. திருப்புலம்பல் | சுட்டறிவொழித்தல் என்பது தன்செயலற நிற்றல் | ஏசற்பத்து சுட்டறிவு ஒழித்தல் |
| 39. திருப்புலம்பல் | சிவானந்த முதிர்வு என்பது சிவானந்தம் பெறாவிச்சை | சிவானந்தம் பெறாமிடி |
| 40. குலாப்பத்து | அனுபவ மிடையீடுபடாமை என்பது விட்டும் பற்றாமல் ஒரு தன்மையாவது | அனுபவம் இடையறாமை |
| 41. அற்புதப்பத்து | அனுபவம் ஆற்றாமை என்பது அனுபவம் முற்றுதல் பெறாமை, விம்முதல் | |
| 42. சென்னிப்பத்து | சிவவிளைவு என்பது சிவனுக்கு நிச்சயப்படுத்தல் | சிவனுக்கு நிச்சயப்படுத்தல் |
| 43. திருவார்த்தை | அறிவித்தன்புறுதல் என்பது உன்னால றியப்படாததுரைக்க அறியென்றது | அறிவிக்க அறிதலென்பது உன்னாலறிய்ப்படாதது நானாக அறிகின்றது. |
| 44. எண்ணப்பதிகம் | ஒழியாவின்பத்து வகை என்பது தேக முதாலகிய ஆசையை அறுத்தல் | எண்ணப்பத்து அவாவினை ஒறுத்தல் |
| 45. யாத்திரைப்பத்து | அனுபவாதீத முரைத்தல் என்பது அனுபவத்தில் அதீதபட்டுப் போனது | |
| 46. திருப்படையெழுச்சி | பிரபஞ்சப்பார் என்பது மலவிளைவற்றது | |
| 47. திருவெண்பா | அணைந்தோர் தன்னம் என்பது பரிவேதி போல என்றது | |
| 48. பண்டாயநான்மறை | அனுபவத்துக் கையமின்மைரைத்தல் | அனுபவத்துக் கைமாறு ரைத்தல் இப்படி இரட்சிக்கப்பட்ட ஆசார்யற்குக் கைமாறிலை என்றது. |
| 49. திருப்படையாட்சி | சீவ உபாதியொழித்தல் என்பது கிரியா சூனியம் | |
| 50. ஆனந்தமாலை | சிவானுபவ, விருப்பம் என்பது சிவானந்தா மேலீட்டில் கிரியாசத்தியழிவுலைத்தல் | மின்னேரனைய பூங்கழல் வழக்கழித்தல், வழக்கறிவுரைத்தல். |
| 51. அச்சோப்பதிகம் | அனுபவ வழியறியாமை என்பது அனுபவத்ததிசயம் | அச்சோப்பத்த அனுபவம் வந்த வழி யறியாமை அனுபவவதிசயம் என்பது. அனுபவம் வழியறியாமை. |

# நினைவிற் கொள்வதற்கு.......!

| | | | | |
|---|---|---|---|---|
| ஆவணி | 1. | 17.08.97 | ஞாயிறு | மாதப்பிறப்பு |
| | | | | விஷ்ணுபதி புண்ணிய காலம் 6.57வரை |
| | | | | ஆவணி ஞாயிறு |
| | 2. | 18.08.97 | திங்கள் | பூரணை விரதம் |
| | | | | யசுர்வேத உபாகருமம் |
| | 5. | 21.08.97 | வியாழன் | சங்கட ஹர சதுர்த்தி விரதம் |
| | 8. | 24.08.97 | ஞாயிறு | கார்த்திகை விரதம் |
| | | | | ஆவணி ஞாயிறு |
| | 9. | 25.08.97 | திங்கள் | ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி |
| | 12. | 28.08.97 | வியாழன் | ஏகாதசி விரதம் |
| | 14. | 30.08.97 | சனி | சனிப்பிரதோஷ விரதம் |
| | | | | செருத்துணையார் குருபூசை |
| | 15. | 31.08.97 | ஞாயிறு | ஆவணி ஞாயிறு |
| | | | | புகழ்த்துணையர் குருபூசை |
| | | | | அதிபத்தர் குருபூசை |
| | 16. | 01.09.97 | திங்கள் | அமாவாசை விரதம் |
| | | | | இளையான் குடிமாறர் குருபூசை |
| | 18. | 03.09.97 | புதன் | மறை ஞான சம்பந்தர் குருபூசை |
| | 19. | 04.09.97 | வியாழன் | ஸாமவேத உபாகருமம் |
| | 20. | 05.09.97 | வெள்ளி | விநாயக சதுர்த்தி விரதம் |
| | 22. | 07.09.97 | ஞாயிறு | ரிஷிபஞ்சமி |
| | | | | ஆவணி ஞாயிறு |
| | 23. | 08.09.97 | திங்கள் | ஷஷ்டி விரதம் |
| | 24. | 09.09.97 | செவ்வாய் | குலச்சிறையார் குருபூசை |
| | 25. | 10.09.97 | புதன் | குங்கிலியக்கலயர் குருபூசை |
| | 26. | 11.09.97 | வியாழன் | ஆவணி மூலம் |
| | 28. | 13.09.97 | சனி | பரிவர்த்தன ஏகாதசிவிரதம் |
| | 29. | 14.09.97 | ஞாயிறு | பிரதோஷ விரதம் |
| | | | | ஆவணி ஓணம் |
| | | | | இருக்கு வேத உபாகருமம் |
| | | | | ஆவணி ஞாயிறு |
| | 30. | 15.09.97 | திங்கள் | நடேச ரபிஷேகம் |
| | | | | அனந்த விரதம் |
| | 31. | 16.09.97 | செவ்வாய் | பூரணை விரதம் |
| | | | | உமாமகேஸ்வர விரதம் |



சிவசூரிய மூர்த்தி

இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினருக்காக செவ்வந்தியில் கணணிப் பொறிக்குட்படுத்தப்பட்டு 17/18, ஒலியமுல்லை, வத்தளை உதயா அச்சகத்தில் அச்சிட்டு 25-09-97 இல் வெளியிடப்பட்டது.